
# முத்திரைக் குறள்கள்



இரா. இளங்குமரனார்

# முத்திரைக் குறள்கள்

இரா. இளங்குமரனார்

**திருவள்ளுவர் தவச்சாலை**
*திருவளர்குடி (அல்லூர்)*
*திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101*
*தொலைப் பேசி : 0431-2685328*

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | **முத்திரைக் குறள்கள்** |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார் |
| மொழி | தமிழ் |
| பொருள் | திருக்குறள் விளக்கம் |
| முதற் பதிப்பு | சூலை 2013 |
| பக்கம் | viii + 60 = 68 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | 13.7 வெள்ளைத்தாள் |
| அளவு | 1/8 |
| படிகள் | 1000 |
| விலை | உருபா : 35 |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவள்ளுவர் தவச்சாலை<br>அல்லூர் - 620 101,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

- **திருவள்ளுவர் தவச்சாலை**
  அல்லூர் 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
  தொலைப்பேசி எண் : 0431 - 2685328

# உள்ளுறை


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 1. கேடும் ஆக்கமே | 1 |
| 2. பெரிதும் இனியது | 3 |
| 3. நல்லதும் பொல்லதே | 6 |
| 4. உன்துயர் உரையேல் | 8 |
| 5. பகையும் பாதுகாப்பே | 11 |
| 6. கல்லார் நல்லர் | 14 |
| 7. கொடுத்தும் கொளல் | 16 |
| 8. பொய்யும் மெய்யதாகும் | 18 |
| 9. செரித்தல் இன்பம் | 20 |
| 10. கயவர் பெருமை | 22 |
| 11. உன்னை நீ காதலி | 25 |
| 12. இழக்க இழக்க ஆவல் | 28 |
| 13. சாதல் இன்பம் | 30 |
| 14. இரத்தலும் ஈதலே | 33 |
| 15. அறிதோ ரறியாமை | 36 |
| 16. மறத்திற்குமா அன்பு? | 39 |
| 17. வளத்துள் வறுமை | 42 |
| 18. வசையிலா வறுமை | 45 |
| 19. ஆக்கமாகா ஆக்கம் | 48 |
| 20. இருந்தவன் இல்லாப் பெருமை! | 51 |
| 21. கயவர் திருவுடையர் | 53 |
| 22. ஈகையன் துயர் | 55 |
| 23. நல்லோன் வறுமை | 57 |
| 24. அச்சம் அறிவுடைமை | 59 |

# முத்திரைக் குறள்கள்

திருக்குறளில் 'அரண்' என்பதோர் அதிகாரப் பெயர். அவ்வரண் நாட்டு அரண் பற்றிக் கூறுவது.

அர் + அண் = அரண். அர் = செம்மை, செம்பு.

**'செம்பிட்டுச் செய்த இஞ்சி'** என்பார் கம்பர்.

செம்புருக்கு நீர் விட்டுச் செய்தலால் கோட்டை அல்லது மதில் இஞ்சி எனப்பட்டது. **'இஞ்சி சூழ் தஞ்சை'** என்பது வாரப்பாடல். அரண் பின்னே காட்டரண், நீர் அரண், நில அரண் எனப் பல்வகையாயின. அரண்பற்றி,

**'ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்'**

என்றது தொல்காப்பிய வழிபற்றிய புறப்பொருள் வெண்பாமாலை. அரண் பொறிகளைச் சிலம்பு அடுக்கும்!

திருக்குறளில் வரும் அரண் (75) பற்றிய ஆய்வன்று இது. வாழ்வியல் அரண் பற்றியது இது. வாழ்வியல் அரண் கூறும் வள்ளுவர் வாழ்வியலில் அரண் போன்ற சிலவற்றை முரண் போலச் சொல்கிறார். அம் முரண் முரணாக இல்லை; அதுவே அரணிலும் பேரரண் ஆவது.

'கேடும் ஆக்கமே'

'நல்லதும் பொல்லதே'

'கல்லார் நல்லர்'

கயவர் பெருமை

உன்னை நீ காதலி

இரத்தலும் ஈதலே

அறிதோ றறியாமை

வளத்துள் வறுமை

முதலியவை முரண்போலத் தோன்றும். ஆழ்ந்து எண்ணுங்கால் அரணாதல் வெளிப்படும். அரணாவன முரண் தோற்றம் தரலால்

அரண்முரண் ஆகும் என்று கொள்ளப்பட்டன. இப்படி மேலும் ஆழ்ந்து நோக்கச் சில குறள்களும் தோன்றக் கூடும். அவற்றையும் இணைத்துக் கொள்ளலாம்.

வள்ளுவம் அள்ள அள்ளக் குறையா வயிரச் சுரங்கம்; பவழப்பாறை; மணிக்குவியல்; பொற்குவை; எடுப்பார் முயற்சிக்குத் தக - சிந்திப்புக்குத் தக - பளிச்சிட்டுத் தோன்றுவன. ஆழங்கால் படப்பட - அருமையாக வெளிப்பட்டு ஆக்கம் வழங்குவன.

சொற் பொருள் அறியா மனப்பாடம் வேறு.

சொற் பொருள் அறிந்த நிலை வேறு.

ஆய்வு நிலை வேறு;

பன்முகப் பார்வை வேறு;

அறிவு, திறம், பயிற்சி, நோக்கு ஆகியவை கொண்டு ஆழங்கால் பட்ட நிலை வேறு.

கற்பார் வளர்நிலைக்குத் தகக் கவின்மணியாகத் தோன்றித் துலங்கும் மாண்பினவை அவை. இவற்றுள் ஒன்றிரண்டு 'ஊடு பயிராக' வருவன. பல ஒரு பயிராக நிற்பன.

ஊடுபயிர் என்பவை ஒரு தனிச் சுவடியாக அமைக்கப்பட்டுள்ளது. அதனைக் கண்டவர்க்கும் அப்பார்வைக்கும் இப்பார்வைக்கும் உள்ள விளக்கப் போக்குகள் இரட்டை நலம் பாலிப்பன.

குறள் விளக்கம் ஏறத்தாழ ஒப்ப அமையக் கருதி, விரிய விளக்கம் பெற வேண்டுவ சுருங்கிய அளவில் அமைந்தது உண்டு. சுருங்கிய அளவில் நிற்க வேண்டியவை சற்றே விரிய நேர்ந்ததுண்டு. அவ்விடர், அதிகாரத்திற்குப் பத்துக்குறள் எனக் கொண்டமையால் வள்ளுவர்க்கும் உண்டாய துண்டு.

ஒரு குறள் விளக்கம் இரண்டாய் விளக்க அமைவாகியமை குறளகத்தேயே உண்டு. அவை உவமை வகையால் உண்டாயவை. சில

குறள்கள் ஒத்த குறள்களாக எடுத்துக்காட்டப்படுவன. சில குறள்கள் முரண் போல அமைதலையும் முரணின்மையையும் காட்டப் பயன்படுவன. எவ்வகையில் நோக்கினும் குறளாசான் நோக்குக்கு மறுதலை அற்றவை!

குறளை ஆயும் தொறும் இன்பமாம்!

பகுப்பாய்வு அதனினும் இனிதாம்!

தொகுத்து முடிவு காணல் மேலும் இனிதாம்!

எத்தனை வகையால் எண்ணினும் அத்தனை வகையிலும் இனிமை சேர்ப்பனவாம்.

எத்தனை வகையால் ஆழங்கால் படினும் ஆணிப்பொன் அன்ன

அருமையதாய்ச் சுடரொளி செய்வன.

எவ்வெவர் எவ்வெவ்வகை நோக்கினும்,

'நவில் தொறும் நூல்நயம்'

என்பதற்கும்.

'அறிதோ றறியாமை'

என்பதற்கும் என்றும் இடமாகி மேலோங்கி நிற்பது திருக்குறள் என்பது ஆய்வுர் முடிபாகத் திகழ்தல் ஒருதலையாம்;

ஆய்தல் இன்பம், முடிந்த முடிபன்று;

மேலாய்வைத் தூண்டுவது அது;

அதனினும் மேலாவது அதனை **நடைநூலாக்கி**

வாழ்வாங்கு வாழ்வது! அவ்வாழ்வை அடைய

இவ்வாய்வுகள் தூண்டுவன! துலக்கமாவது நடைநூலாவதேயாம்; இன்னவற்றால் மேற்கொள்ளப்பட்ட குறள்கள் 'முத்திரைக்குறள்கள்' எனப் பெயர் பெற்றன. ஏனெனில், வள்ளுவர் உள்ளத்துக்கிளர்ந்த வாழ்வியல் அரண் ஆகிய **முத்திரை**யுடையவை ஆதலால்!

திருமழபாடிக்கு வாய்த்த தமிழ்மணியாய், தமிழ்வாழ்வுக்குத் தலைமணியாய், நூற்படைப்பின் நுண்மாண் நுழைபுலத்தராய், முயற்சிக்கு முழுதுறூஉம் எடுத்துக்காட்டாய், புலவராவர் புரவலருமாவார் என்பதன் சான்றாளராய் விளங்கும் முனைவர் **அ. ஆறுமுகனார் – சாரதையார்,** தம்மகனார் திருநிறை **இளங்கோவனார் தேவியார்** மணமங்கலக்கொடையாய் வழங்கிய தொகையால், இந்நூல் தவச்சாலை வெளியீடாக வெளிப்படுகின்றது என்பதை நன்றியறிதலுடன் தெரிவித்துக் கொள்கிறேன்! ஆறுமுகனார் முன்னரே தவச்சாலை அறங்காவலராகத் திகழ்பவர் என்பது சுட்டத்தக்கது.

வழக்கம் போல் இந்நூலை அச்சிட்ட திருச்சிராப்பள்ளி **அச்சுக்குழும்பினர்** அவர்களுக்கும், பயன் கருதாப் பயன் பணியாக மெய்ப்புப் பார்த்துதவிய முனைவர் திருமிகு **பி. தமிழகனார்க்கும்** நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

**10.06.2013**

❖❖❖

# 1. கேடும் ஆக்கமே

நலம் பொலம் என்பவை இணைச்சொல்.

நலம் – நன்மையாவது.

பொலம் – தீமையாவது.

நலத்தை விரும்புவதும் பொலத்தை வெறுப்பதும், உலகியல் பொதுமை. ஏன்? உயிரியல் பொதுமையும் ஆம்!

உலகம் என்பது உயர்ந்தோரைச் சார்ந்த நிலை.

உயிர்களின் பொது நிலையை, 'இன்ப ஆக்கமும் துன்ப நீக்கமும்' என்பார் திரு.வி.க.

"எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும்"

என்பது தாயுமானப் பேருள்ளம்.

"எல்லா உயிரிகளும் இன்புற்றிருக்க வேண்டும்"

என்பது வள்ளுவர்க்கும் வள்ளலார்க்கும் அமைந்த மாணப்பேருள்ளம்!

இந்நிலை மாந்த நேயம், மேலும் மேலும் வளர்ந்து, ஆன்மநேய நிலையை உற்று, எவ்வுயிரும் தம்முயிராக எண்ணும் எண்ணமும், பிறவுயிர்களெல்லாம் தம்முயிரே என்னும் அருட்பெருக்கும் அமைந்து தம் நலம் அற்ற சிறப்பியல் நிலை; மாந்தர் அனைவர்க்கும் உள்ள பொது நிலை அன்று. அந்நிலையை மாந்தர் அனைவரும் அடைய வேண்டும் என்பதற்கு வழிகாட்டிகளாக வாழ்ந்தவர்கள் அவர்கள்.

தமக்கு வரும் துயரைத் தாங்குவது அரிது.

தமக்குப் பிறர் கேடு செய்தால் தாங்குவது அதனினும் அரிது.

பிறர் செய்த கேட்டைத் தாங்கிப் பொறுப்பது அதனினும் அரிது.

அதனினும் அரிது அவர் செய்த கேட்டை மறந்துவிடுவது.

இவ்வெல்லாவற்றினும் மேம்பட்டதும் உண்டு. அது,

அவர் செய்த கேடும் நலமேயாம் எனக் கொள்வது.

இந்நிலையை வள்ளுவர் கூறுவது ஆறாப்புண்ணை ஆற்றித் தழும்பு தானும் தோன்றாமல் ஆக்கும் உயர்மருந்தெனத் திகழ்கிறது. அது,"இவர் உண்மை அன்பும் நண்பும் உறவு உரிமையும் உடையார்; இவர் அத்தகையர் அல்லார் என்பதைக் கண்டு கொள்வதற்கு வாய்த்த வாய்ப்பாகும்" என்பது அது,

**கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை**
**நீட்டி அளப்பதோர் கோல்** - (796)

என்பது. கேட்டைக் கேடாக எண்ணும் உலகில், கேட்டுக்குக் கேடும், பன்மடங்குக் கேடும் செய்யும் உலகில், கண்ணுக்குக்கண், பல்லுக்குப்பல், உயிர்க்கு உயிர் என்னும் உலகில், 'கேடு செய்வாராலும் நமக்கு நன்மை உண்டு; அஃது, உண்மை - அன்பு - நண்பு - உறவினர் இவர், என்று அடையாளம் கண்டு கொள்ள வாய்த்த வாய்ப்பாகும்' என்று எண்ணும் ஆக்கப்பாடாம் என்னும் போது வள்ளுவர், வானுயரம் உயர்ந்து வான்மழை என்னத் தேன்மழை பொழியும் திருவாளராகத் திகழ்பவர் ஆகிறார்.

"கேட்டையும் நலப்பாடாக நினைக்கும் மாறுதலான ஆக்கப் பார்வை அவரன்ன மேம்பாட்டாளர்க்கு வாய்ப்பதை அல்லாமல், எவருக்கும் வாய்ப்பது ஆகாது" என நம்மை எண்ணவைக்கும்; ஏறிட்டுப் பார்க்கவும் வைக்கும்!

**ஓர்** – ஒப்பற்ற; உறுதி – திட்ட மான – திட்பமான நன்மை; **கிளைஞர்** – அடிமரத்திலிருந்து இரண்டாய் மூன்றாய்க் கிளைத்த கிளைகளைப் போல்வார்.

அடிமர நீரை – உரத்தை – நிமிர்வை – ஒப்பக் கொள்ளும் உரிமையர்.

**நீட்டி அளப்ப தோர் கோல்** – நீட்டல் அளவைக் கோல். கிடைத்தற் கரியதாம் அளவு கோலையும், நீட்டல் கோல் என்னும் கலைச் சொல்லையும் தந்துவிடுகிறார்.

"ஊருக்கு ஒருவர் தோழர்" என்பது பழமொழி.

'பழமை' என்பதோர் அதிகாரம் திருக்குறளில் உண்டு. அது

வழிவழியாகத் தொடரும் நட்பின் சிறப்பினது.

தீ நட்பு, கூடா நட்பு முதலாகப் பல சொல்லியவர் திருவள்ளுவர் அவற்றில் எல்லாம் காணாத நுண்ணிய பார்வையில்
கூறுவது,

**"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை**
**நீட்டி யளப்பதோர் கோல்"** - (796)

என்னும் இக்குறள், முத்திரைக் குறளாம்.

❖❖❖

# 2. பெரிதும் இனியது

உறவு கொள்ள – நட்புக் கொள்ளத் – தக்காரைத் தேர்ந்து கொள்வதே வாழ்வியல் நிலை.

தக்கார் இனத்தராய் வாழ்தலே தம் தகுதியைக் காக்கும். வளர்க்கவும் செய்யும்.

தகவிலாக் கீழ்மையர் உறவு, கேட்டை ஆக்காமல் தீராது. கேடு வருவதற்காகவே பேதைமைத் தன்மை முந்துற உண்டாகும் என்பதை, 'பேதைப்படுக்கும் இழவூழ்' என்பார் வள்ளுவர்.

அறிவெனப்படுவதும் செறிவெனப்படுவதும் பேதையர் கூறும்

சொல்லைப் பொறுத்துக் கொள்ளல் என்னும் **கலித்தொகை!**

குழந்தைமையின் பேதைமை வேறு; அது கரவு களங்கம் அற்றது; தன் அறியாமைச் செயல்களால் உரிமை உறவுடையாரை மகிழச் செய்வது. பேதைப்பருவம் என்பது மிக இளமைப்பருவம்! தவழ்ந்தும் நடந்தும் ஆடியும் பாடியும் மகிழ்ந்தும் மகிழ்வித்தும் இன்பம் செய்யும் கழி இளமழலைப் பருவம்.

நாம் கூறும் பேதைப் பருவமோ மூடத்தில் மூடமாயும், முட்டிக் குனிந்தாலும் உண்மையறியாது முதிர் மூடமாயும் இருப்பது. அறிவதையும் கூட மூடமாகக் கருதுவது. அத்தகையர் அறிவை மேம்படுத்த முயல்வாரையும் அறிவிலியாக்க வல்லது என்பதை,

**"காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்**

**கண்டானாம் தான்கண்ட வாறு"** – (849)

என்பது வள்ளுவம்.

அறிவனையும் சான்றோனையும் எள்ளி நகையாடுவதும், அற்பமானதற்கும் துள்ளித்தூண் முட்டுவதும், ஊரெல்லாம் பொல்லாப் பழியைச் சொல்லிச் சொல்லிப் பரப்பி மகிழ்வதும் அறியாத வெல்லாம் அறிந்ததாகச் செருக்குவதுமாம் மூடம், இம்மூடம்! பேதை மூடம் என்பது இது.

இத்தகைய மூடமும் எதிர்பாரா நிலையில் உறவாகிவிடல் உண்டு. நெருக்கமாக இருந்து தொண்டு செய்வான் போல இருப்பதும் உண்டு. நாமும் நம்பும் வகையிலும் நேர்ந்துவிடலும் உண்டு. எனினும், "உண்மை அறிவே மிகும்" என்பது போல் வெளிப்படல் இல்லாமல் போகாது.

என்செய்வது? இடம் தந்து விட்டோம்! மடம் பிடுங்குவோன் போல் உள்ளான். சொன்னாலும் குற்றம்; சொல்லி வெளியேற்றினாலும் பெருங்குற்றம். வெறும் வாய்க்கு அவல் இட்டது போல மேலும் மெல்லவே ஆகிவிடும்!

காலைச் சுற்றிய பாம்பு கடியாமல் போகாது என்று அடித்தால் காலும் அடிபடாமல் தீராதே.

பேதை உறவைக் கொண்டது தவறு. அப்பேதை, தானே வெளியேறாமல் வெளியேறச் செய்வதோ வெளியேற்றுவதோ அதனினும் பெருந்தவறு.

பேதை செயலைத் தாங்க முடிய வில்லை என்றாலும் தம் தகுதியைக்காக்கும் வகையால் - பெருங்கேடு ஏற்படாமல் தடுக்கும் வகையால் பொறுத்துக் கொள்வதுதான் தன்தகுதிக்கு அழகு. ஆனால், அப்பேதையே நட்பை விட்டுப்போக நினைத்தால் தெய்வமே முன்வந்து உதவுவதாக எண்ணிக் கையெடுத்து வணங்கி அனுப்பாவிட்டாலும், மனமகிழ்ந்து வழியனுப்ப வேண்டும். அள்ளுவ அள்ளவும் கொள்ளுவ கொள்ளவும் தூற்றுவ தூற்றவும் ஆனாலும், எதுவும் காட்டிக் கொள்ளாமல் பிரிந்து போவதை நோக்கிக் கிடக்க வேண்டுமேயன்றி, வேறு செயல் செய்தலாகாது. ‘ஒன்றீத்தும் விடுக’ என்பார் வள்ளுவர். இன்றியமையா ஒன்றை விரும்பினால் கூட அதனைத் தந்து கூட அதன் போக்கில் வெளியேற விட்டுவிட வேண்டும் என்பார்.

அத்தகைய பேதையர் உறவை நல்லது என்று எவரேனும் கொள்வரா? கூறுவரா?

திருவள்ளுவர் அப்பேதையர் நட்பும் நல்லதே என்று கூறுகின்றார்.அவர் பிரியும் நிலை உண்டாவது அதனினும் நல்லதே என்கிறார். என்ன நன்மை எனின், பிரிவுத்துயர் என்பது எள்ளத்தனையும் இல்லாமல், பெருமகிழ்வையும் தருமல்லவோ! ஆதலால்,

**“பெரிதினிது பேதையர் கேண்மை பிரியுங்கால்,**
**பீழை தருவதொன் றில்”** - (839)

என்பது அது.

அறிவாளரை - பண்பாளரை - நல்லோரைச் சிறிது பிரியினும் பெருந்துயரம் என்பதை,‘உள்ளப் பிரிதல்’ என்பார்! மீண்டும் மீண்டும் நினைத்து வருந்தப் பிரியும் பிரிவு அன்றே பேதையர்ப் பிரிவு?

பிரிந்து போயதால், வர இருந்த தீமை, பழி ஆகியவை இல்லாமல் தொலைந்த மகிழ்வு அல்லவோ ஏற்படுகின்றது.

வளர்த்த பூனை, நாய் இறந்தாலும் காணாமல் போனாலும் வளர்த்தார்க்கு வாட்டமாம். வான்மழை இல்லாமல் செடியும் கொடியும் பயிரும் வாடினால் அவற்றின் பயனை நம்பியிருந்த உழவனுக்குப் பெருங்கவலையாம்! பயன் மிக்க மரம் பட்டுப்போனால் பருவம் தோறும் வந்த வளம் போயதே எனத் தோப்புக்காரனுக்குத் துயரம் பெரிதாம்! நேர இருந்த நேர்ச்சிகள் இழப்புகள் எல்லாமும் இல்லையாய்விடின் பெரிய இன்பம் - பேரின்பம் - இல்லையா? அதனால் தான்,

"பேதையர் கேண்மை பெரிது இனிது" என்றார். ஏனெனில் அவர்கள்.

"பிரியுங்கால் பீழை தருவது ஒன்று இல்" எனமுடிவு கூறினார்.

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயது அல்லவா! பரமார்த்த குருவுக்கு, அவிவேக பரிபூரண பரமார்த்தகுரு எனப் பெயரிட்டுப் புனைந்தார் வீரமா முனிவர் ஒருகதை. அதில் வரும் மாணவர் பெயர் மட்டி, மடையன், முட்டாள், மூர்க்கன், மிலேச்சன் என்றார். ஐவர் பேதைமையால் குரு 'ஐயோ' எனப் போனார் என்பது அக்கதை.

ஆசிரியன் மூக்கின் மேல் ஈயொன்று உட்கார அதனை ஓட்டப் பேதை மாணவன் பெருங்கல் ஒன்றைத் தூக்கிப் போட ஈ பறந்தது ! ஆசிரியர் உயிரும் பறந்தது என்பது நாட்டுப்புறக் கதைகளுள் ஒன்று.

இவை, பேதையர் கேண்மைக் கேட்டை விளக்குவன அல்லவா! அவர் பிரிவு, தீராத்துயர் தீர்ந்த பேறு அல்லவா! இன்னும் ஒருபடி மேலே செல்வார் திருவள்ளுவர்! மேல்வரவு; எதிர்பாரா வரவு என்பவை ஊதியம் என்பது உலகியல்.

பேதையின் உறவை நீக்குதல் பேரூதியம் என்பதை,

**"ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்**
**கேண்மை ஒரீஇ விடல்."** - (797)

என்பது அது. மேலும் அவர் வலியுறுத்துவது,

"ஒன்று ஈத்தும், ஒரூவுக ஒப்பிலார் நட்பு" என்பது. நட்பாராய்தலில் தான் நலமும் கேடும் உண்டு என்பதை நிலைநாட்டுவது போல் கூறுகிறார் வள்ளுவர்.

# 3. நல்லதும் பொல்லதே

பொய்கூறல் தவறு, புறங் கூறல் தவறு, கடுமொழிகூறல் தவறு; களவு, கொள்ளை, கொலை முதலியவை செய்தல் தவறு; ஒழுக்கக் கேடு, ஏமாற்று, வஞ்சம், கையூட்டு, கடத்தல் ஆகியவை தவறு!

இவை சான்றோர் ஆகிய எவரும் கூறும் தவறுகள்! சமயங்களும் சாற்றும் தவறுகள்!

ஆனால், இவற்றை விரிய விரியக் கூறும் திருவள்ளுவர்

**"நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு"** என்கிறாரே!

நன்றாற்றல் என்றால் நல்லது நினைதல், நல்லது சொல்லல் என்பனவும் அடங்கியவை தாமே!

இது, மாறுபாடு இல்லையா? கேடானவற்றைத் தவறு என்றவரே, நல்லது செய்தலைத் தவறு எனலாமா? எனின், ஏதோ ஓர் அடிப்படை இல்லாமல் சொல்லியிருக்க மாட்டார் அல்லவா! அந்த அடிப்படையை அறியாமல் அவர் சொன்னதைத் தவறாகக் கொள்ளலாகாதே!

முப்பாலில் எப்பாலும் அறம் கூறும் அறவாழி அந்தணராம் அவர், அவ்வாறு கூறக் காரணம் என்ன?

"நன்றி பாராட்டாதே! உதவி எதுவும் செய்யாதே" என்று ஒரு தந்தை மகனுக்குத் தம் இறுதிப் போதில் சொன்னாராம். மகன், "பலவும் கற்றுத் தெளிந்த தாங்கள் இப்படிச் சொல்கிறீர்களே" என்றானாம்.

"காலம் கெட்டுக் கிடக்கிறது; மக்கள் கெட்டுக் கிடக்கின்றனர்; இந்நிலையில் என்மகன் நல்லவனாக வாழ்ந்து கெட்டுப்போகக் கூடாதே என்று உன் தந்தை என்னும் முறையில் சொல்வதைக் கடமையாகக் கொண்டேன்" என்றானாம். ஒரு செருமானியத் தந்தை கூறியதாகக் காட்டுவார் **மு.வ.** இதனை!

அப்படி எண்ணித் திருவள்ளுவர் கூறவில்லை! எப்பாலும் நன்மை காக்கவே வள்ளுவர், "நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு" என்கிறார்.

ஓர் அரிமா அமைப்பு தொழிலுக்கு உதவியது. ஆனால் உதவி பெற்றவன் பெருங் குடியன்! பணம் கிடைத்ததும் தொடர்ந்து குடித்தான்; வீட்டில் உள்ளவர்களை உதைத்தான் - திட்டினான் - தெருவில் மானங்கெடக் கிடந்தான். அவன் மனைவி பணம் உதவிய அரிமாக் கழகத்தினரைக் கண்டு அழுதாள், 'எங்கள் குடியைக் கெடுத்து விட்டீர்கள்'

என்றாள். ஏன்? குடியனுக்குச் செய்த உதவி குடிகேடு ஆகிவிட்டதல்லவா! நன்றாற்றல் அதனைப் பெற்ற குடியனால், தீதாகி விடவில்லையா?

**"உதவி வரைத்தன் றுதவி உதவி**
**செய்யப்பட்டார் சால்பின் வரைத்து"** - (105)

என்று உதவியின் மதிப்பு உதவியில் இல்லை. உதவியைப் பெற்றவர் பண்பில் - சால்பில் - முயற்சியில் - அல்லவோ உள்ளது?

**"நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்**
**பண்பறிந்து ஆற்றாக் கடை"** - (469)

என விளக்கம் தருகிறாரே!

"பாத்திரம் அறிந்து பிச்சையிடு"

என்னும் பழமொழியை எண்ணினால் தெளிவாகுமே! பிச்சை என்பது பிச்சைச் சோறு தானா? உதவி யெல்லாமும் சுட்டுமல்லவா!

சுவைமிக்க பால்; தேன் கலந்த பால்! அதனைச் சாய்க்கடையில் கொட்டினால் என்ன ஆகும்? குழந்தைக்குக் கொடுத்தலுக்கும் குப்புறச் சேற்றில் கொட்டுதலுக்கும் வேறுபாடு இல்லையா?

நல்லதே செய்யாதே என்று சொன்னாரா?

பயன் மரமாகக் கொடு!

ஊருணியாக உதவு!

மருந்து மரமாக இரு!

மழை போல் பொழி!

என்றவர் அல்லரோ, சொல்கிறார்!

ஒன்றுமில்லாமலே ஊரை நடுங்க வைக்கும் கொடுமையனுக்கு ஊராட்சிப் பதவியைத் தந்தால் என்ன ஆகும்?

'செய்தக்க அல்ல செயக் கெடும்' தானே. இப்படிப் பட்ட இடங்கள் வள்ளுவப் பெருமான் காட்டும் ஒளிவிளக்கு மாமணிகள் அன்னவையாம்!

போகாதே எனச் சிவப்பு விளக்கு, போக்கு வரத்துச் சாலையில் இல்லையா! அப்படிப் பட்டவை இவை.

❖❖❖

# 4. உன்துயர் உரையேல்

**'இரக்க இரத்தக்காரைக் கண்டால்'** என்றவர் வள்ளுவர்.

**'இரத்தலும் ஈதலே போலும்'** என்றவரும் அவர்.

'அளவளாவுதல் இன்றியமையாதது' என்பவரும் அவர்.

எனினும் சொல்கிறார்.

"உன்துயரை - வறுமையை - முட்டுப்பாட்டை - வெளியிடாதே" என்கிறார்.

முன்னே உள்ளவற்றைச் சொன்ன அவரா இதனையும் சொல்கிறார். ஆம்! அவர்தாம் சொல்கிறார். அவர்தாம் சொல்லவும் முடியும். சொல்லத் தக்கதைத் தேர்ந்து சொல்கிறார்.

'நோவற்க' என்கிறார்.

உன் துயரப்பாட்டினைச் சொல்லாதே!

துயரைச் சொன்னால் அல்லாமல் தீர்ப்பார் யார்? என்கிறாயா?

"கூறாமல் நோக்கிக் குறிப்பறிவார்" உண்டே!

"அகத்தை முகத்தால் முழுதறியும் திறவோரும்" உண்டே!

சொல்லித்தான் - கேட்டுத்தான், அறிய வேண்டும் - என்பது இல்லையே!

சொன்னாலும் தெரியாதவன் - காது கொடுத்துக் கேளாதவன் - கையெடுத்து உதவுவானா?

துயரைக் குறிப்பாக அறிந்து உடனே அதனைத் தீர்க்க எண்ணாதவனுக்கு நீ உன் குறையைக் கூறி என்ன பயன்? உன் மானமும் மதிப்பும் இழந்தது தான் மிச்சம்!

"நோவற்க நொந்த தறியார்க்கு" என்றார். அதாவது, நொந்ததைத் தாமே அறியாதவர்க்கு - அறிந்து உதவாதவர்க்கு - உன் துயரைக் கூறாதே என ஆணையிடுகிறார்!

கல்என்று தெரிந்தும் முட்டினான் எனின் முட்டாள் தானே!

நொந்தது அறியாதவனிடம் சொன்னால் என்ன பயன்?

உன் நிலையை - உன் நோவை - எவரெவரிடமெல்லாம் சொல்ல முடியுமோ அவரிடமெல்லாம் சொல்லிப் பழி பரப்பியாவான்! அந்நோவும் உன்னை வாட்டும்! உனக்கு மானக் கேடாகத் தோன்றும். நீ அவனிடம்

சொல்லிய தவற்றைப் பழிபரப்பப்பட்டபின் நினைத்து ஆவதென்ன? பழிபரப்பியனை நொந்து ஆவதென்ன? பரவிய சிறுமை பரவியது தானே!

ஊர்வாயை உலைமூடி வைத்து மூட முடியுமா? என்பது பழமொழி. உள்ளிருந்த உன்குறை ஊரறிய வாகி ஒரு நூறு மடங்குத் துயரை அடையவே செய்விக்கும் ஆதலால்,

'நொந்த தறியார்க்கு நோவற்க' என்பது மானங்காக்கும் மாப்பெரிய பாதுகாப்பு மொழி – மறைமொழி ஆகும்.

இதே குறிக்கோள் அமைந்த பாட்டில் இவ்வளவில் வள்ளுவர் நிற்காமல் இன்னும் அரியதோர் மறையைப் - பாதுகாப்பையும் வைக்கிறார். அது

"மேவற்க, மென்மை பகைவர் அகத்து"

என்பது. ஏழு சீர்களில் இரண்டு அரண்கள்!

உன்பகைவரிடத்து உன் குறைவை - இன்மையை - தாழ்வை - இயலாமையை - இரக்கத்தைக் காட்டாதே!

நீ பகைவரிடத்து அவற்றைக் காட்டினால் அக்காட்டுதலே அவர்க்கு ஊக்கமும் உரமும் ஆகி உன்னை எளிமையாய் எண்ணி எளிமையாய் அழிக்க வலிய கருவியை நீயே அவர் கையில் எடுத்துத் தந்தது போலாகிவிடும்!

பகைவனிடம் கத்தியைத்தந்து என் கழுத்தை அறு என்பதற்கும் இம் மென்மை காட்டற்கும் வேற்றுமை இல்லையாம்.

அவன் வலிமை என்னவோ? துணை என்னவோ? எண்ணம் என்னவோ? எப்படிக் கருவியனோ? என அஞ்சி அஞ்சிக் கிடந்தவனுக்கு அஞ்சாத் துணிவைத் தந்து உன் அழிவைத் துணிந்து செய்ய அவனுக்கு நீ நல்ல துணையாகி விடுவாய்!

தாம் பிழைக்க அமிழ்த முண்பார், தாம் சாவ மருந்துண்பரோ? உன்னைக் காக்க வேண்டிய நீ உன் பகைக்கு அஞ்சாத் துணையாய் நீயே நின்று உன்னை அழித்துக் கொள்ளலாமா?

உன் மென்மையைப் பகைவன் அறியக் காட்டாதே! நெப்போலியனுக்கு, ஒரு பரப்பாளன் இருந்தான். அவன் செய்திப் பரப்பலுக்கு முன், "நெப்போலியன் சிறிய படையைக் கொண்டு பெரிய படையை வென்றான்" என்று செய்தி எழுதிக்கொண்டுவந்து செய்தித் தாளுக்குத் தருமுன் ஒப்புதல் கேட்டான். படைத்துறையின் கமுக்கத்தைக்

காட்டிப்பகையை வலிமைப் படுத்தும் எழுத்து உன் எழுத்து. நம் படை சிறிய படை என்பது படைத்துறைக் கமுக்கத்தை வெளிபடுத்துவது இல்லையா?

"நெப்போலியன் வலிய படையைக் கொண்டு பகைவர் பெரிய படையை வென்றான்" என்று அமை! – என்றான்.

'சிறிய' என்னும் சொல்லும் 'வலிய' என்னும் சொல்லும் ஒத்தனவா? ஒரு சொல் எவ்வளவு பெரிய பொருளதாய் மாறிவிடுகின்றது!

'தோழனோடும் ஏழைமை பேசேல்'

என்பது பழமொழி. அவன் தோழமை மாறும் நிலை ஒருகால் உண்டானால் உன் ஏழைமையைப் பரப்புவானா, மாட்டானா? வாழ்வில் எத்தனை எத்தனை விழிப்புகள் வேண்டும்! அவற்றைத் தேர்ந்த தெளிவினர், உலகுக்கு உரைத்து **அல்லோர் வலையுள் நல்லோர் பட்டு மாயாமல் காப்பது கடமை** ஆதலால்,

'பகைவரிடம் உன் மென்மையைக் காட்டாதே'

என்றார் திருவள்ளுவர்.

**"வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்**
**தீயெச்சம் போலத் தெறும்"** - (674)

என்பதும் வள்ளுவம்.

எடுத்த வினையை – முயற்சியை – அரைகுறையாய் விடாதே.

அடுத்த பகையை அழிப்பதில் அரைகுறை வைக்காதே! அரைகுறை இவ்விரண்டிலும் வைத்தால் தீயணைப்பார், பெருந்தீயை அணைத்து விட்டுச் சிறிதாகக் கனன்று கொண்டிருக்கும் கங்குத் தீயை – சாம்பல் மூடியுள்ளே அணையாமல் கனலும் தீயை – அணைக்காமல் விட்ட குறைபோல் ஆகிவிடும்!

கனன்ற தீ காற்று வாய்த்ததும் பரவி எழுந்து முன்னைத் தீயினும் மும்மடங்கு அழிவைச் செய்துவிடும்! "மாற்றானுக்கு இடம் கொடேல்" என்பது ஔவையார் அருமைமொழி!

மாற்றானை அழிப்பதில் அரை குறை வைக்காதே என்பது வள்ளுவம்.

மாற்றானை அழைத்து அழைத்து நாடு மொழி இனம் ஆகிய எல்லாமும் இழந்தது தமிழினம் என்பதை எண்ணின் வள்ளுவர் வாய்மொழி மாண்பு உண்மையின் விளக்கமாம்.

❖❖❖

# 5. பகையும் பாதுகாப்பே

கொடுத்து எதனைப் பெறுவோம்?

கொடுத்து, வேண்டியதை - இன்றியமையாத் தேவையானதைப் பெறுவோம். கட்டாயம் உணவு வேண்டும்; உறைவிடம் வேண்டும்! இவற்றினும் மேலாக உடையும் வேண்டும்!

வாழ்வியலில் கொள்ள வேண்டுவனவும் கொடுக்க வேண்டுவனவும் பல உள்ளமை எவரும் அறிந்தது.

பண்டமாற்றுக் காலமாக இருந்த நாளிலும் சரி, பணமாற்றாக மாறிய நிலையிலும் சரி கொள்ளலும் கொடுத்தலும் இல்லாமல் உலகியல் வாழ்வு இல்லை!

ஆனால், பகைமையைக் கொடுத்து வாங்க வேண்டுமா?
நட்பைக் கொடுத்து வாங்கல் நல்லதே!
பகையைக் கொடுத்து வாங்கல் நல்லதோ?
பகையைக் கொளல் வேண்டும் - கொடுத்தும் - மிகக் கொடுத்தும்
கொளல் வேண்டும் என்று வள்ளுவர் சொல்வது தகுமா?
தக்கதை அன்றித் தகாததைச் சொல்லாரே அவர்!
அவர் சொல்கிறார்.

**"கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற அடுத்திருந்து**
**மாணாத செய்வான் பகை"** - (867)

என்பது, மன்ற - உறுதியாக, நிரம்ப. அவனும் தொலைவில் உள்ளான் அல்லன்! அடுத்திருப்பவன்! நல்லது செய்வான் அல்லன்! மானக் கேடானவை - மதிப்பற்றவை - இழப்பானவை - என என்ன உண்டோ அவ்வளவும் செய்பவன்.

பகையை அரைகுறை இல்லாமல் பூண்டோடு அழிக்க வேண்டும் இல்லையேல் பின்பு வளர்ந்து கெடுக்கும் என்றவரா சொல்கிறார்? ஆம்! அவர்தாம் சொல்கிறார்!

பகையை முற்றாக அழிக்க வேண்டும் என்பது அரசியல் முறை!

பகையைப் பகையாக வைத்திருக்க வேண்டும்: அவனுக்கு வேண்டுவ எல்லாம் தந்து பகையாக வைத்திருக்க வேண்டும் என்பது தனிநிலை அறம்!

அவனால் நாம் திருத்தமாக - ஒழுங்காக - செவ்வையாக - வாழ அவன் உதவுவான். ஏனெனில், நம் குறைகாணவே நோக்கி நோக்கி இருக்கிறான் அல்லவா! நம்மைச் செம்மையாக நடக்க - வாழ - அவன் பார்வை உதவுகின்றது அல்லவா! அவன் அப்படி இல்லையானால் நாம் முறை கெட்டுப்போகும் நிலையும் உண்டாகலாம் அல்லவா! ஆதலால், அவன் பகையாக நம் பக்கத்தில் இருப்பது நல்லதே என்றார். இன்னும் இன்னாத செய்தார்க்கும் இனியவே செய்தல் வேண்டும் என்னும் வள்ளுவ உள்ளம் அறிந்தால், இதனை மறுக்காமல் போற்றவே செய்யும். மேலும் ஓர் ஆழமான பொருளும் கொள்ள வாய்க்கும்.

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்"** - (314)

என்பதன்படி, நாம் இவ்வாறு பகையாக இருந்தும் நம் இடருக்குப் பகையெனக் கருதாமல் - வேண்டியும் கொள்ளாமல் - தேடி வந்து உதவினானே அவனையா நாம் பகை பாராட்டுவது, கேடு செய்வது என அவன் எண்ணி உண்மை உணர்ந்து நண்பாகி விட வாய்ப்பு ஏற்படும் அல்லவா! அப்போது நல்லதுணையும் ஆய்விடுவான் அல்லவா!

ஏனெனில் வள்ளுவரே,

பகைவரை அழித்தலும் நண்பரை ஆக்கலும் தவத்தால் உண்டாகும் என்பவர் அல்லரோ!

அவர் பகையை ஒழித்தல் என்பது பகைமை நீங்கி நண்பராகச் செய்தல் தானே!

தவமே தம் துயர் தாங்கிப்பிறர் துயர் தீர்த்தல் அல்லவா! அவ்வகையாக நோக்கின் மேலும் சிறந்த பொருள் கிடைக்கிறதே!

**"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்"** - (264)

குணமென்னும் குன்றேறி நிற்பவன் சினத்தன் ஆவான் - ஆனான் - என்றால், அவன் பழுதிலா முழுதுறு துறவன் அல்லன். பொறிபுல அடக்கம் உடையன் அல்லன். நிலையில் திரியா மலையன் அல்லன்! அவன் எத்தனை பெரியனாய் எத்தனைபேர் சரடு விடினும் உயர்ந்தவன் ஆகவே மாட்டான்! எளிமையாக உணர்த்தும் அறம் ஆறுவது சினம்!

ஏறும் வெகுளியன் அறத்தனா? அருளனா? அந்தணனா? பாம்பின் கழுத்தில் பசுங்கொடி என எழுதிவைத்தால் பசுங் கொடியாகி விடுமா? பாம்பின் தற்காப்பு சீறல் - கடித்தல்! இவன் தற்காப்பா தற்கேடா?

இவற்றை எண்ணின் பகைவனாக இருத்தலும் நன்றே!

பகையொழித்து நட்பாக்கிக் கொள்ளலும் நன்றே!

எதனாலும் கேடில்லை என்னும் இருமை நலமும் கொள்ளப்

பொருள் காணலே வள்ளுவப் பெருமையாம்.

❖❖❖

# 6. கல்லார் நல்லர்

கல்லானுக்கு ஒரு பெருமையுண்டு அவன் கற்றோர் அவைக்குச் சென்று காது கொடுத்து அமைந்து கேட்டலை அன்றி வாய்மூடி இருத்தல்.

**கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லா திருக்கப் பெறின்** - (403)

என்பார் வள்ளுவர்.

மேலும் உவமையால் விளக்குவார். கற்றார் முன் கல்லான் ஏதேனும் சொல்ல அவாவுதல் பெண்மைக்குப் பெருநலமும் பேரழகும் பெருமையும் ஆக்கும் மார்பகம் இல்லாமல், பெண்மை நிரம்பியவளாகத் தன்னை எண்ணிக் கொண்டு ஆடவர் கூட்டத்தை அவாவி நிற்றலாம் என்றும் கூறுவார்.

கற்றவனுக்கும் கற்றவற்றுள் எல்லாம் சிறந்ததாய்க் கற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றை வள்ளுவர் சொல்வார். அதனைப் பலர் அறியாது இழிவுறல் கண்கூடு.

கற்றவன் கல்விப் பெருமையை இழந்து விடக் கூடாது என்னும் பெரும் பார்வையால்,

'ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்'

என்பார். கல்வி ஒளியாம் நூலறிவும், கேள்வியறிவாம் செவி ஒளியும், பட்டறிவாம் பளிச்சொளியும் உண்மை அறிவாம் உள்ளொளியும் உடையாரும் தம்மை ஒத்த ஒளியர் முன் அவரொப்ப - அவரை விஞ்ச - ஒளியராகத் திகழ வேண்டும்! அதற்குத் தக்க தகுதியை மேம்படுத்திக் கொண்டே வரும் நுண்மாண் நுழை புலத்தராகத் திகழ வேண்டும். இடமறிந்து காலமறிந்து தம் ஒண்மை விளங்கத் தோற்றம் தர வேண்டும். இத்தகு திறம் பெற்றவர் அடங்கிக் கிடக்க வேண்டிய இடமும் உண்டு. பண்பட்ட நிலத்தில் அன்றிப் பாறைமேல் விதைதெளிக்க மாட்டான் எளிய அறிவுடைய உழவனும்! கரட்டு நிலத்தில் கார்ச்சம்பா விதைக்கக் கருதமாட்டான் கருத்துடைய உழவன். அவ்வாறே பண்பட்ட அறிவாளனும் பக்குவம் வாய்ந்த அவையிடத் தன்றித் தன் சீரிய கருத்துகளை வெளிப்படுத்தமாட்டான். வெளிப்படுத்தி வாளா தன் அறிவுப் பேற்றை ஒழித்துச் சிறுமைப் படாமல் வாய்மூடிக் கொண்டிருப்பான். அதனை வள்ளுவர் **"வெளியார்முன், வான்சுதை வண்ணங்**

**கொளல்"** (714) என்பார். வெளியார் எவர்? அறிவிலியர்! சோறும் வெண்மையானது தான்! பனஞ்சோறு, தென்னஞ்சோறு என்பனவும் வெண்சோறுதான். அவை 'வெளிறு' எனப்படும்.

உள்வயிரம் இல்லாதது சோறு உடையது. அத்தகையரிடம் ஒளியுடையவரும் ஒடுங்கியிருக்க வேண்டும்! எப்படி?

சுண்ணாம்பு நிறம் என்ன? வெண்மை! அதிலும் சிப்பிச் சுண்ணாம்பு மிகு வெள்ளை!

பலவகை வண்ண வனப்புக் கலைவல்லானாக இருப்பவனும் வெள்ளையறிவினனாக இருந்து விடல் வேண்டும். அப்பொழுதுதான் சிறுமைப் படாமல் இருப்பான்.

காய்ந்த ஓலை கலகலக்கும்!
பச்சை ஓலைக்கு இல்லை ஒலி!
வெண்கலத்தின் ஓசைமிகும்! ஆனால்,
பொன்கலத்தில் ஓசை இல்லை!

இவை, மக்கள் வழக்கிலும் புலமையர் வழக்கிலும் உள்ளவை. இவற்றை எண்ணின், கற்றோர் அவையில் ஏறு நடையிட வல்லாரும், மற்றோர் அவையில் மாண அவரினும் அறிவிலியாக அடங்கியிருத்தலே மாண்பாம் என வள்ளுவம் பேரொளி விளக்கம் செய்கின்றமை அறியலாம்!

சிலப்பதிகாரம் என்றார் தேர்ந்து தெளிந்து பதிப்பித்தவர். அதைக் கேட்டவர். அப்படிச் சொல்லக் கூடாது. அது சிலப்பதிகாரம் இல்லை. 'சிறப்பதிகாரம்' என்று தான் சொல்ல வேண்டும் என்றார்! அவர்க்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்து பயன் என்ன?

வள்ளலார், ஒரு 'வன்முறையாளர்' என்றார் ஒருவர். அவர் வள்ளலார் இயலை - சொல்லை - செயலை அறிந்தவரா? அவர்க்கு விளக்கம் செய்து தெளிவாக்க எவ்வளவு பாடு வேண்டும்! அவர் இப்படி எத்தனை மறுப்புகளை உட்கொண்டிருப்பார்! ஒவ்வொன்றையும் வேலை கெட்டு விளக்கிப் பயன் பொழுதைப் பாழாக்க வேண்டுமா?

முன்னது உ.வே. சா. அவர்கள் வரலாறு.
பின்னது என்னிடம் கேட்கப் பட்டது.

❖❖❖

# 7. கொடுத்தும் கொளல்

உற்ற நண்பனாக உயிர் நண்பனாக இருப்பது போல் இருந்தவன் தன் போலிமையை மறைத்திருந்தான்! நம்ப வைப்பதற்காக வேண்டுவ செய்தான். முத்த நாதன் மெய்த்தவத் தோற்றம் தரவில்லையா? அவன் அரசியரையும் போகச் செய்து மெய்ப் பொருளாரை எண்ணியவாறு முடித்து விடவில்லையா?

மெய்யனிலும் மெய்யனாகத் தோன்றும் பொய்யர் உண்டு என்பது சிந்திப்பார் அனைவர்க்கும் தெளிவானதே!

பொய்யன் போலி எனப்புலப்பட்டுத் தள்ளப்பட்டவனும் மீளவும் திருந்தியவனாக - பழைய குற்றம் உணர்ந்து வருந்தியவனாக ஒட்டிக் கொள்ள - மீண்டும் ஒட்டிக்கொள்ள - வருவான் இல்லையா?

அத்தகையனைப் பற்றி எண்ணுகிறார் திருவள்ளுவர்,

**"இழைத்திருந்து எண்ணிக் கொளல்"**

என்பது ஒரு தேர்வு முறை.

பல்கால் பலவழிகளால் எண்ணியறிந்து சேர்த்துக் கொள்ளல் அல்லது தள்ளிவிடல் என்பது ஒரு முறை.

இன்னொரு நயமான முறையும் உண்டு என்பதையும் கூறுகிறார்.

"முகத்தால் நட்பாகக் காட்டிக் கொள்!
அகத்தால் உறவாக அணுகவிடாதே"

என்பது.

**"பகை நட்பாம் காலம் வருங்கால் முகநட்டு**
**அகநட்பு ஒரீஇ விடல்"** - (803)

என்பது அது.

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்**
**தகநக நட்பதே நட்பு"** - (786)

என்ற வள்ளுவரே, இதனையும் கூறுகிறார். ஏன்? இதனையே வாய்மை யறமாகக் கொண்டாரும் கூட வஞ்சரை நம்பி வாய்மை போற்றலால்

அழிந்து போகக் கூடாது என்னும் எச்சரிக்கைப் பேருள்ளத்து வெளிப்பாடே அஃதாம்!

அறம் போற்றுவான் அழிவது மருந்துமரம் படவிடுவது போல்வது அல்லவா!

நற்குடியில் பிறந்தவனாக இருப்பான். நமக்குத் தொடர்பு இல்லாதவனாகத் தானுண்டு தன்கடமை உண்டு என்றிருப்பான். அவன் கண்டு கொள்ளவில்லை என்று எண்ணி நீயும் அவனை எண்ணாமல் விடாதே! அவனை நெருங்கி அவன் நிலையை அறிந்து அவனுக்கு இன்றியமையாத் தேவையாய் உள்ளதை உணர்ந்து உதவிசெய்து அவன் நட்பைப் பெறுதல் உனக்கு நல்லதாம்! ஆக்கம் பல செய்வதாம்!

இன்னும் ஒருவன். அவன் தன்மேல் சிறியதோர் பழி உண்டாகினும் நாணம் கொள்பவன்; இப்பழி செய்தோமே - செய்ய நேர்ந்ததே என அறியாமல் செய்த குறைக்கும் வெட்கித் தலை குனிபவன்; அவன் அக்குறையை மீளச் செய்வான் அல்லன்; அத்தகையன் எவற்றிலும் ஈடுபாடு காட்டாமல் - எவரையும் பார்த்து உரையாடவும் மாட்டாமல் ஒதுங்கி - ஒதுங்கி - இருப்பவன். அவனைக் கண்டு நீ அணுக்கமாகப் பேசு - அடிக்கடி பேசு - அவனைத் தேற்று - அவனுக்கு வாழும் நம்பிக்கை ஊட்டு - அவன் நட்பு அரிய நட்பு. அவனுக்கு வேண்டுவ வெல்லாம் செய்து நட்புடையனாக்கிக் கொண்டால் உனக்கு மிகமிக நல்லதாம்! நண்பனி லெல்லாம் தலையாய நண்பனாகத் திகழ்வான் என்றார் திருவள்ளுவர்.

கொடுத்தும் பகையை விலக்கச் சொன்ன அவரே,

கொடுத்தும் நட்புக் கொள்ளத் தக்காரை இனம் காட்டல்

வாழ்வியல் தேர்ச்சி வழிமுறையால் கண்டு கொண்டு

வாழ்வார்க்குக் காட்டிய வாய்மையாம்.

**"குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்**
**கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு"** - (794)

என்பது அது. இதனொடு,

**"கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து**
**மாணாத செய்வான் பகை"** - (867)

என்பதையும் ஒப்பிட்டுக் காணல் மேல் தெளிவாம்.

❖❖❖

## 8. பொய்யும் மெய்யதாகும்

**"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று"** -(297)

என்றவர் திருவள்ளுவர். அவரே,

**"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்"** -(291)

என்கிறார்.

வாய்மை என்பது எவ்வகையாலும் தீமை ஆக்காதது என்று கூறுதலால் ஒருவரையறை செய்கிறார்.

உண்மையாக - பொய்யற்றதாக - மெய்யான தாக - இருப்பது எது எனினும், அது பிறர்க்கும் தீமை செய்யாத தாகவும் இருக்க வேண்டும் என்பதால் தீமை செய்யும் வாய்மை பொய்மைத் தன்மையை - பொய்மை செய்யும் தீமையைச் - செய்வதாய்விடின் வாய்மைத் தன்மை இழந்து போய்விடுகின்றது! தன்னலம் இல்லாமல் பிறர் நலம் நாடிய பொய்யுரை ஒன்று சொன்னால், அப் பொய்யின் தீமையைப் பயவாமல் மெய்யின் நலத்தைச் செய்வதால், மெய்யின் இடத்தைப் பெற்று விடுகின்றது.

மெய்யின் இடத்தைப் பெற்றதே அன்றி, அது மெய்யாகி விடாது. ஆதலால், மெய்யெல்லாம் மெய்யாவதில்லை, பொய்யெல்லாம் பொய்யாவதில்லை. மெய்யோ பொய்யோ அவற்றின் விளைவாம் பயனைப் பொறுத்தே கொள்ளப்படும் என்கிறார். இதனைப்

**"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்"** -(292)

என்கிறார். உன்னிப்பாக இதனை நோக்க வேண்டும்! புரை (குற்றம்) தீர்ந்த (நீங்கிய) நன்மை பிறர்க்கு ஆக்குவதாக இருக்க வேண்டும். அப்படி ஆக்கினாலும் வாய்மை அன்று. வாய்மை இடத்தில் அப்பொழுதில் மட்டும் வைத்துக் கொள்ளலாம். ஒருநாளும் பொய் மெய்யாகாது என்பதே வள்ளுவ ஆட்சியாம்.

“எங்ஙனம் பொய் மெய்யாம்?”

என்று வினாத் தொடுத்த நல்லறிஞரும் உண்டு. அவர் ‘இடத்த’ என்பதை எண்ணின் வள்ளுவக் குறையாகக் கண்டிரார்.

வள்ளுவ நோக்கு வாய்மை என்று சொல்லியும் தீமையை உண்டாக்கிவிடக் கூடாது என்பதுவே.

நன்மையும் எத்தகு நன்மை என்பதை,

**‘புரைதீர்ந்த நன்மை’** என்றார்.

வாழ்வியல் நடைமுறைச் சிக்கலைத் தீர்க்கும் வாய்மை அறம் ஈதே அன்றிப் பொதுவாய பொய்யை மெய்யாகக் கொண்டது ஆகாதாம்?

கொலைகாரன் ஒருவன் கொலைக் கருவியோடு ஓடிவருகிறான். அவனுக்கு முன்னே பதைபதைக்க ஒருவன் எங்கே மறைவது எப்படித் தப்புவது என்னும் தவிப்பில் வருகிறான். இதனைக் கண்ட ஒருவன் தன்வீட்டுள் அவனை நுழைய விட்டுவிட்டு அவன் ஓடி அந்தப் பக்கம் போனான் எனக் கைகாட்டித் தப்பச் செய்கிறான். அவன் செய்தது கரவாகுமா? சொன்னது பொய்யாகுமா?

ஓர் உயிரைக்காத்த உயர்வாளன் அல்லனோ அவன்? நான் வாய்மையாளன்! அவன் உள்ளே இருக்கிறான் என்றால் கொலைகாரனுக்குத் துணைபோன குற்றவாளி அவன் அல்லனோ!

புரை தீர்ந்த நன்மையாம் பொய், பொய்யே எனினும் நன்மை செய்ததாகி விடுவதால் பழிக்கு இடமற்ற பொய்யாம் என்க.

❖❖❖

# 9. செரித்தல் இன்பம்

வகைவகையாக ஆக்கி ஆறு சுவைகளையும் அறுபது வகைச் சுவையாய்ப் பெருக்க உண்பது இன்பம் இல்லையா?

இன்ன கடையில் இவ்வுணவு இந்நேரம் சுடச்சுடக் கிடைக்கும் எனத் தேடிப் போய் உண்பார் இலரா?

இத்தகையரை எண்ணியே,

"அவியுணவின் ஆன்றோர்"

எனப்பட்டம் வழங்கினார் வள்ளுவர்.

"கழிபேர் இரையான்"

என்றும் கூறினார். ஆனால் அவரே, உணவுச் சுவையைப் பார்க்கிலும் உயர் நலமாவது உண்ட உணவு செரிக்கும் இன்பம் என்கிறார்.

உணவு உண்பது இனிதா?

உண்ட உணவு செரிப்பது இன்பமா?

பல நாளும் மலச்சிக்கலுக்கு ஆட்படுவார் மனச்சிக்கல், தீராச் சிக்கலாக இருப்பதால் தானே மலமிளக்கிகள் வகைவகையாக மருந்துக்கடையில் இடம் பெறுகின்றன!

"உணலினும் உண்டது அறல் இனிது"

என்பது வியப்பும் திகைப்பும் ஏற்படுத்தவே செய்யும். ஊண்சுவை தானே உயர்சுவை எனத் தோன்றும். உண்ட உணவு வயிற்றுள் சென்று பாடாய்ப்படுத்தினால் கடலலையாகக் குடலலை எடுத்தால் வெளியேறித் தொலையாதா என ஏங்குவார் இலரா?

இடரில்லாமல் மலம் வெளியேறும் உடலினர்க்கு ஊண் சுவை தோன்றும்! ஆனால், மலச்சிக்கல் உடையார்க்கோ அது வெளியேறிய போதில் உண்டாகும் இன்பம் இன்பத்தினும் இன்பமாகத் தோன்றும்.

இதைச் சொன்னதால் திருவள்ளுவர் மிகமூத்தவராய் - மலச்சிக்கலுக்கு ஆட்பட்டு அல்லல்பட்டிருக்க வேண்டும் என்று ஆய்ந்தாரும் உண்டு.

ஆனால்,

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது**
**அற்றது போற்றி உணின்"** (942)

"அற்றதறிந்து கடைப்பிடித்து"

"மாறிலா உண்டி மறுத்துண்ணின்"

என்று மருந்து அதிகாரத்துக் கூறுவதை எண்ணினால் அவர் மலச்சிக்கலுக்கு ஆட்பட்டிருப்பார் என்று கூற இயலாது. அவர் கூறிய நுண்மாண் நுழை புலக் குறளை நோக்க அவர் மிகப்பெரு மூதாளராக இருந்திருப்பார் என்பதுடன், உடல் மூத்தாலும் உளம் இளமைக் கிளர்ச்சியோடேயே வாழ்ந்திருப்பார் என்பதையும் உறுதியாகக் கூறலாம். அதிலும் இங்குச் சுட்டப்பட்ட குறள்களை நோக்கும் போது அவர்தம் பட்டறிவின் முதிர்வு எளிதில் விளக்கமாம்.

"உணலினும் உண்டது அறல் இனிது" என்ற வள்ளுவர் அதனை உவமை யாக்கலிலும் ஓரின்பம் காட்டுகிறார்.

எல்லோரும் எண்ணுவ தென்ன? துய்த்தல் - புணர்தல் - தானே இன்பம் என்பர். காமம் புணர்தலின் ஊடல் இனிது என்கிறார் அவர்! பசித்தவனுக்கு அல்லவோ உணவின் அருமை புலப்படும். தவித்தவனுக்கு அல்லவோ நீரின் அருமை விளங்கும். வெயிலடிபட்டவனுக்கு அல்லவோ நிழலின் அருமை தெளிவாம். வாடையின் வருத்தப்பொழுது அல்லவோ தென்றல் நலத்தை உணரச் செய்யும். ஊடியவனுக்குத் தான் - ஊடியவளுக்கும் தான் - கூடல் இன்பம் கொள்ளை இன்பமாம்!

தவறிலராயினும் ஊடிக் கூடல் இன்பம்!

இல்லை தவறவர்க் காயினும் ஊடிக் கூடல் அல்லவோ உவகை! என இருமுறை வலியுறுத்திய வள்ளுவர், (1321,1325)

**"ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்**
**கூடலில் தோன்றும் உப்பு"** - (1328)

என்கிறார்! உப்பிலாப் பண்டம் குப்பையிலே என்பது போல் ஊடிப் பெறாக் கூடலை ஒப்பாமல் தானே,

**"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்"** - (1330)

என நூலையே நிறைவு செய்கிறார்!

❖❖❖

# 10. கயவர் பெருமை

கயம் - கருமை; இருள்; ஆழ்ந்த நீர்நிலை என்னும் பொருள் தரும் சொல். கயவாய் எனின் பெரிய வாய் என்றாம். கயத்திடத்து, கயத்தின் நீர் செல்வழி என்னும் பொருள்களையும் தரும். "செங்கண் கயவாய்ப் புனிற்று எருமை" என்பார் குமர குருபரர். பெரிய என்னும் பொருளில் கயம் வருவது அது. திருக்குறள் 108 ஆம் அதிகாரம் கயமை என்பது. கயவரைக் கடையாக வைத்துப் பொருட்பாலை முடித்தார். முன்னைக் கூறிய அறவழி நில்லாதார் அவர் எனற்கு. கயவரை 'அறைபறை அன்னார்' என்றார்.

பறையை அறைந்தால் ஒலி பரவிச் செல்வது போல ஒருவர் சொன்ன சொல்லை ஊரெல்லாம் கேட்கச் செய்து விடும் புறங்கூறுதலை - கோள் கூறுதலை - உடையவர்க்கு ஒப்பாகக் கூறினார்.

**"அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட**
**மறைபிறர்க் குய்த்துரைக்க லான்"** - (1076)

என்பது அது. அவர் கேளாமலும் அவர் செவிப்பறையில் அடித்தும் சொல்லிவிடுபவர் என்றார். அவர் திருந்தார்; திருந்த வேண்டில் கரும்பை ஆலையில் ஆட்டுவது போல் வருத்த வேண்டும் என்பார்.

இவை யெல்லாம் கயவர் கயமையைப் பழிப்பன போல்வன. ஆனால் கயவரும் தேவரும் ஒப்பாவர் என்பதை,

"தேவரனையர் கயவர்"

என்பார். என்ன ஐயா, திருவள்ளுவரையே தேவர் என்றனரே, 'திருவள்ளுவ தேவர்' என்றும் 'தேவர் குறளும்' என்றும் கூறினரே! 'தேவரனையர்' என்கிறாரே!

தொல்காப்பிய தேவர், கபில தேவர், பரண தேவர், கண்ணப்ப தேவர், நக்கீர தேவர், அச்சணந்தி தேவர், வச்சணந்தி தேவர், அருண்மொழித் தேவர், இராசராச சோழ தேவர், இராசேந்திர சோழ தேவர் என்று உயர்ந்தோர் பலர்க்கும் தேவர் என்னும் பெயரிருக்கக் கேட்கிறோமே!

தேவரனையர் கயவர் என்கிறாரே எனப் பலர்க்கு முரண் தோற்றம் தரும்! அது செவ்விதில் எண்ணார் முரணே அன்றிச் செந்நாப் போதார் முரணன்றாம்.

சட்டம் என்பது இல்லாமலே, சான்றோரே சட்டத்தின் மேம்பட்ட சால்பில் வாழ்ந்து கொண்டிருந்தனர் இல்லையா? இருப்பவர் இல்லையா? அப்படிச் சான்றோர் இருப்பதால் தான்,

**"கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"** - (981)

**"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்"** - (989)

**"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்**
**தாங்காது மன்னோ பொறை"** - (990)

எனச் சான்றாண்மையிலும்.

**"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்"** - (996)

எனப் பண்புடைமையிலும் திருவள்ளுவர் கூறினார்.

சட்டம் இல்லாமலும் சட்டத்திற்கு மேம்பட நடப்பவர் மேலோர். அவர்க்குச் சட்டம் தேவை இல்லை. அவர் இயல் செயல் சொல் கொண்டே சட்டமே உருவாக்கப்பட்டது.

உலகம் என்பது உயர்ந்தோரை - உயர்ந்தோர் ஒழுக்கத்தைக் குறிப்பது என்பது தொல்காப்பியம்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"** - (50)

என வள்ளுவரே தெளிவாக்குதல் அறிக!

இனிக் கயவர் நிலையைக் காண்போம்!

களவாடாதே! கொள்ளையடிக்காதே! கொலை புரியாதே! என்பவை சட்டங்கள் தாமே! அச்சட்டத்தை மதிப்பார் அச் செயல்களில் ஈடுபடுவரா? அவர்களுக்குச் சட்ட விதிவிலக்கு உண்டா? சட்டம் இருந்தும் அவரைக் கட்டுப்படுத்த வில்லை; அவர்கள் கட்டுப்படவும் இல்லை!

உயர்ந்தோர்க்குச் சட்டமே தேவையில்லை!
கயவர் சட்டத்தை மதிப்பதே இல்லை!
இருவருக்கும் சட்டத்தால் பயன்பாடு இல்லை! அவ்வகையால்
ஒப்பாகிவிடுகின்றனர் அல்லவா!

அதனால் தான்,

**"தேவர் அனையர் கயவர் அவரும்தாம்**
**மேவன செய்தொழுக லான்"** - (1073)

என்றார். மக்கள் அல்லர் அவர்; மக்கள் தோற்றத்தர் அவ்வளவே.

**"மக்களே போல்வர் கயவர்; அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்ட தில்"** - (1071)

என்றார்.

**"மாவும் மாக்களும் ஐயறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"** - (தொல்: 1531)

என்பதில் விலங்கும் விலங்கனையவரும் என்பவர் கயவர். காட்டு விலங்குக்குச் சட்டம் உண்டா? சட்டமிட்டாலும் அதை உணர்ந்து போற்றுமா? அதற்குச் சட்டம் போட்டு என்ன பயன்?

'நரியே ஆட்டைத் திருடாதே'

'புலியே மானைக் கொல்லாதே'

இப்படிச் சட்டம் இடாமை ஏன்? அவற்றின் உணவுக்கு வேண்டுவன - இல்லாமல் தீராதன - அவை!

அப்படியா மாந்தன் நிலை?

திருடி - கொள்ளையடித்து - கையூட்டு வாங்கி - கடத்தி - கள்ளக் காசடித்துத் தான் வாழ வேண்டுமா? மணற் கொள்ளை - கற் கொள்ளை - கரிக் கொள்ளை எனக் கொள்ளையடியாமல் வாழ முடியாதா? சட்டத்தை நிறைவேற்றும் சட்டமன்ற உறுப்பினரும், சட்டம் கொண்டு வந்த அமைச்சரும், சட்ட மன்ற ஆட்சி மன்றத் தலைவரும் இவர்களை ஆட்டிவைக்கும் கட்சித் தலைமையரும் சட்டத்தை மதியாமை பட்டப்பகல் வெட்டவெளி! சட்டம் தெரிந்ததே - தெரிவதே - சட்டத்தை ஏமாற்ற - மறைக்க - மீற - என்று ஆகிவிட்டவர்கள் இவர்கள்! இவர்களிலும் கயவர்கள் இல்லை! இருப்பதோ தேவநிலை! செய்வதோ கயவர் நிலை! வள்ளுவர் நாளிலும் இந்நாளில் இக்குறள் விளக்கம், மலைமேல் விளக்காம்!

❖❖❖

# 11. உன்னை நீ காதலி

காதல் என்பது பருவ ஒற்றுமையும் பால்வேற்றுமையும் உடையது.

பருவ வேற்றுமையும் பால் வேற்றுமையும் கூடினாலும், 'பெருந்திணை'
என ஐந்திணை அன்புக்கு அப்பாலாக ஒதுக்கப்பட்டு விடும்! பால் ஒற்றுமை, பருவ ஒற்றுமை எனினும் கீழ்மைப்பட்டதே! விலங்குகளும் கூடாக் கூட்டம் அது! ஆயினும் போலிமை உலகம் அதற்கும் சட்டப்பாதுகாப்பு வேண்டும்! மணம் கொள்ளும் உரிமையும் வேண்டும் என்கிறது!

நாம் எவரும் எண்ணாத காதல் ஒன்றனைச் சுட்டுகிறார்! அச்சுட்டு, அடிப்படைச் சுட்டு! ஆக்கச் சுட்டு! அருமையினும் அருமையாகப் போற்றிக் கொள்ள வேண்டும் சுட்டு!

'ஊனுடம்பு ஆலயம்' என்றார் திருமூலர்!

'உடம்பினை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே' என்றும் கூறினார்.

**"கொண்டது என்றன்னை கொடுத்தது உன்றன்னை**
**யார் கொலோ சதுரர்"** என்பார் மணிவாசகர்!

வள்ளலாரோ ஏறாத மேட்டில் ஏறி இறைநிலை எய்தியவர்!

இவையெல்லாம் சொல்வ தென்ன?

உன் உடலைப் பொய்யாய் - அருவறுப்புப் பொருளாய் - நிலையில்லாததாய் - நினையாதே! அதுவே மெய்! நீ இருப்பதை - உன்வாழ்வை - உன் இயக்கத்தை மெய்ப்பித்து என்றும் அழியா மெய்யுடல் ஆக்கும் மூலம், மெய்யே! ஆதலால், இம்மெய்யைக் காத்தல் அன்றிக் காதலோடு காத்தலன்றி மெய்யியல் அறிந்தவன் ஆகாய்! ஆதலால்,

"தன்னைத்தான் காதலன் ஆதல்" வேண்டும் என்றார் வள்ளுவர்.

ஆண்பால் பெண்பாலையும், பெண்பால் ஆண்பாலையும் காதலித்தல் தானே இயற்கை நெறிமுறை! எல்லா உயிரிகளுக்கும் கூடப் பொதுமுறை! தன்னைத் தான் காதலிப்ப தெப்படி? அக்காதல் பயன் என்ன? சுருங்கிய பார்வை அல்லவா அது? என்ன, என்னென்னவோ

எண்ணத் தோன்றும்! வள்ளுவர் வாய்மையர் - அறவர் - அந்தணர் - உலகவர் - உலகத்து உயிர்களெல்லாம் தளிர்க்க வேண்டும் என்னும் ஆன்மநேயர். அவர் பார்வையின் ஆழம் அகலம் உயரம் பெரிது! மிக மிகப் பெரிது. அதனால் இதனைக் கண்டுரைக்க முடிந்தது.

தன்னை விரும்பாதவன் எவன்? அல்லது எவள்?

தன்னை விரும்பாமல் வாழமுடியுமா?

உண்ண, உடுக்க, உறைய, துய்க்க, வேட்பது ஏன்?

தற்காதலால் உண்டாவன தாமே இவை!

தன்னையே காக்காதவன் - விரும்பாதவன், பிறரைக் காப்பானா? விரும்புவானா?

தானே பிறருக்குப் பாரமாய்ப் போவானா இல்லையா?

பிறர் நலம் பேண விரும்புபவன் முதற்கண் தன்னைப் பேணிக் கொள்ள வேண்டும் அல்லவோ?

தற்காத்து என்றாரே பெருந்தக்க பெண்மைக்கு! அத் தற்காப்பு ஆணுக்கில்லையா?

அவளோ அவனோ படுத்துவிட்டால் குடும்பமும் படுத்து விடாதா? வருவாய் படுத்து விடாதா? தொழில் படுத்துவிடாதா?

ஆதலால் ஆணும் பெண்ணும் தன்னைத் தான் மிக மிக நன்றாக நோய் நொடியின்றி, தற்கேடு எதுவும் இன்றிப் பேணிக் கொள்ள வேண்டும்.

குடிப்பவன், குடியைக் கெடுப்பவன் இல்லையா?

சோம்பனாம் மடியன் குடியை - குடும்பத்தை - மடித்துப் போகச் செய்வானா இல்லையா?

தீராச் சினத்தன் சுற்றத்தையே தீர்த்துக் கட்டுவானா இல்லையா?

வெட்டிச் செலவன் - வட்டிக்கடை வாயிலில் நின்றவன் - வைப்புப் பணம் எடுப்புப் பணம் வைத்திருப்பானா?

பாராப் பயிர் பாழாய்ப் போகாதா?

சூதில் தலைப்பட்டவன் சுற்றம் பேணுவானா?

தன்மேல் பற்றுடையான் - தன்னைப் பேணிக் காப்பான் குடிநலம் காப்பான்.

“குடும்ப நேயம் கொள்பவர் கொள்ளார், குடியும் சூதும் மடியும் மானமும்” என்பது மணிமொழி இல்லையா?

அதனால் திருவள்ளுவர்.

> **“தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்**
> **துன்னற்க தீவினைப் பால்”** - (209)

என்றார். துன்னற்க - நெருங்காதே; கொள்ளாதே. தன்னைக் கெடுக்கும் கேடு எல்லாவற்றையும் எல்லாரையும் கெடுக்கும் கேடாம்! தற்காப்பான் குடிநலம் காப்பான்.

# 12. இழுக்க இழுக்க ஆவல்

"சட்டி சுட்டதடா – கை விட்டதடா"

என்பது மெய்யியல் பாடல்.

சுட்டாலும் சுட்டுச் சுட்டுக் கெட்டாலும், விட்டொழிய விடா ஒன்று சூது.

பொருள் போகப் போக மேலும் மேலும் ஆசையைப் பெருக்கி ஆட்டம் போடவே செய்வது சூது.

**ஒன்றெய்தி நூறு இழக்கும் சூது** – இது வள்ளுவம்.

ஆயிரங்கள் ஆன தருமங்கள் உணர்ந்த தருமக் கோமான், செய்த தென்ன?

சீ சீ ! சிறியர் செய்கை செய்தான்?

"தழல் கொண்டு வாடா தம்பி அண்ணன்

கையை எரித்திடு வோம்"

இது வீமன் அருச்சுனனுக்கு இட்ட கட்டளை! இவை பாரதியார் பாடிய பாஞ்சாலி சபதக் காட்சிகள்!

நளன் கதை என்ன, காட்டிலே மனைவியைக் கைவிட்டுப் போனது தானே!

**"நாடாண்ட மன்னரும் காடாண்டார் சூதினால்**

**ஏனோதான் எண்ணார் இதை"** (கைவிளக்கு)

எனக் கேட்கத் தோன்ற வில்லையா?

திருவள்ளுவர் சொன்னார்:

"இழத்தொறும் காதலிக்கும் சூது"

பொருள் இழக்க – இழக்க – பற்று மிக்கு, விற்காததை விற்று – விற்க எதுவும் இல்லையானால் தன்னையும் தன் மனைவியையும் விற்று,

**"எற்றிற் குரியர் கயவர்ஒன் றுற்றக்கால்**

**விற்றற் குரியர் விரைந்து"** – (1080)

என்பதற்கு எடுத்துக் காட்டானவர். நளனும் தருமனும் . பெரியவர்கள் அல்லரோ! சின்னத்தனம் செய்பவர்க்குப் பெரியவர் பட்டமா? வெட்கமாக இல்லையா?

**"ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்**

**நன்றாகா தாகி விடும்"** – (128)

என்பது நம்மறை அல்லவா!

**"புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி**
**மூக்கிற் கரியார் உடைத்து"** - (277)

என்பதும் தானே!

சூது, இழத்தொறும் ஆவலைப் பெருக்கும் ஆட்டத்தை விடாமல் தொடர என்பது எதற்கு உவமை?

துன்பம், துயரம், நோய், அலக்கண், இடுக்கண், வறுமை எனப் பலப்பலவும் ஒருவன் வாழ்வில் வரவர, வாழ்வை வெறுத்தல், சலித்தல், உளைதல், புலம்பல் எனப்பல உண்டாயினும். வாழ வேண்டும் என்னும் ஆர்வம் மட்டும், நன்றாக இருந்த போதைக் காட்டிலும் நலியும் இப்போதில் நெடிது நெடிது வாழவே எண்ணம் உண்டாகும்; உண்டாக்கவும் செய்யும்!

முன்றில் போகா முதிர்வினள் யாயும்: ஆயினும் தன் முதுமையை வெறுத்துக் கொண்டும் தன் குடும்ப வறுமையை நினைத்துக் கொண்டும் வாழவே நினைத்தல் சங்கக் காட்சிகளுள் ஒன்று. அதனால் துன்பம் உழத்தொறும் காதற்று உயிர் என்றார் வள்ளுவர்.

**"ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்தம் ஆமே"** - (2615)

என்னும் **திருமூலம்** அங்கே தலைகாட்டாது.

"சாகத் துணிந்தவனுக்கு மாக்கடலும் மார்பளவு"

என்பது செல்லாது.

"சாதலில் இன்னாதது இல்லை"

என்பதே தலைகாட்டி எத்தனை துயரையும் தாங்கி வாழவே உயிர் வேட்கை முந்து நிற்கும். ஆதலால்,

**"இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்**
**உழத்தொறூஉம் காதற் றுயிர்"** (940)

என்று உவமைப் படுத்தினார்.

இவ்விரண்டுமே கற்பார்க்கு வியப்புத் தரினும் கண் கொண்டு காண வாய்த்துக் கொண்டிருப்பவை தாமே!

'சாதல் இன்பம்' காண்க.

# 13. சாதல் இன்பம்

சாதலைப் போலக் கொடுமையானது எதுவும் இல்லை என்பது உலகறி உண்மையாக இருக்கவும் உலகநூல் செய்த வள்ளுவர் சாதல் இன்பமானது என்பாரா? என்றது ஏன்?

மானம் அழிய வந்த இடத்து அதனை உயிரினும் மேலாகக் கருதுவார் 'இறத்தல் இன்பம்' என்பதற்குச் சான்று சேரமான் **கணைக்கால் இரும் பொறை!**

தன் மனச் சான்றில் தான் செய்தது குற்றம் என எண்ணிய அளவில் அரியணையில் இருந்து வீழ்ந்து ஆருயிர் நீத்த **ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்** பழிக்கு அஞ்சி யிறந்ததற்குச் சான்றாகும்.

தங்கள் காதல் தடையால் வாழ்தல் கைகூடாது என்னும் நிலையில் இருவரும் இணைந்து ஈருயிரும் ஒருயிராய் ஒன்றிய காதலர் இறப்பு இனிது ஏற்பதாம்! கடன் தொல்லையில் விடுபட நோய்த் துயரில் விடுபட இறப்பார்க்கு அதுவே வாழ்வினும் இனிதாகத் தோன்றித் தற்கொலை செய்தல் நாடறி செய்தி!

இன, நாடு, மொழிப் பற்றால் போராடிகளாகத் துணிந்தார் மகளிர் பொற்றாலியென நச்சுக்குப்பியை எப்பொழுதும் கழுத்தில் அணிந்திருந்து பகைவனுக்கு எவ்வாறும் இன, நாடு, மொழி அழிப்புக்கு இடந்தந்து விடக் கூடாது எனத் தற்கொடை புரியும் ஈழத்து ஈகையர் அன்னோர்க்குச் சாதலே இன்பமாகக் கண்ட காட்சிகள் ஒருபது இருபது அல்ல! பல்லாயிரர்!

இந்தி எதிர்ப்புக்குச் சான்றாக இன்னுயிர் விட்டோர் மொழிக் காதலர் நெஞ்சில் அகலார்!

அவ்வாறானால், 'சாதல் இன்பம்' எனப் பொதுக் கணக்குப் போட்டு விடலாமா?

வள்ளுவர் சாவைப்போலக் கொடுமையானது எதுவும் இல்லை என்று கூறுகிறார். **"சாதலின் இன்னாதது இல்லை"** என்பது அது.

வைர அணிகலம், முத்துமாலை, தங்கக்கட்டி இழந்தாலும் தம் உயிர் தப்பினால் போதும் எனக் கொலைகாரன் கொள்ளைக்காரன் ஆகியோனிடம் கழற்றித் தந்து உயிரைக் காப்பது இல்லையா?

எப் பொருளினும் உயிர் உயர்ந்ததாகத் தோன்றலால் தானே அந்நிலை!

அப்பொருள் போனாலும் தேடலாம்; வாழலாம்!

உயிர் ஆகிய பொருள் போய்விட்டால் பொருளோடும் அல்லவோ போகின்றது. மீட்ட முடியுமா போன உயிரை! உயிர் வாழ்வு உயர்வால் தானே – பற்றால் தானே விடக் கூடாது என்னும் ஆவலால் தானே, துன்பம் உழத்தொறும் காதற்று (காதலை உடையது) என்றார் வள்ளுவர்!

அவரே, 'சாதல் இனிது' என்றால் என்ன கருதுகிறார்?

வண்மையர் உளர்! தம் துயரை - வறுமையை - பசியை - எண்ணாமல் பிறர் துயரை – வறுமையை – பசியை – ஆற்றுவதே பிறவி நோக்கு எனக் கொண்டவர், அந்நோக்கு நிறைவேறா நிலையில் உயிர்வாழ்தலால் என்ன பயன் என இனிய தம் உயிரை விடவும் துணிகின்றனர்!

அப்படி உண்டா? உண்டு என்பதற்குச் சான்று தலைக் கொடையாளியாம் குமணன் இல்லையா?

நாட்டை இழந்தான்! காட்டை அடைந்தான்! அவன் நாடிழந்து காட்டில் இருந்தாலும் தம் வறுமைப் பாட்டைத் தீர்த்துக் கொள்ள அவனைக் கண்டு தம் பாட்டைப் பாடுகிறார் புலவர்.

நாடு இழந்ததைப் பார்க்கிலும் பாடுபெறு புலவன் பரிசில் இல்லாமல் வெறுங் கையோடு போதல், வண்மையே வாழ்வாகிய அவனை வாட்டியது. தன் தலையைக் கொண்டுவருவார்க்குப் பரிசில் தருவதாகக் கூறிய தம்பியின் நினைவு வந்தது. அவன் நல்லது செய்தான்! தலைக்கு விலைவைத்தான்! புலவர் என் தலையைக் கொண்டு சென்று தம்பியிடம் தந்தால் பரிசு பெறலாம் என எண்ணுகிறான். வாளைப் புலவர் கையில் தருகின்றான், தன் தலையைக் கொய்து கொள்ளுமாறு! பெருந்தகைப் புலவர் இது சரியான பொழுது என எண்ணி வாளை வாங்கிக் கொண்டு தலைக்கு விலைவைத்த தம்பியைக் காண்கிறார். நிகழ்வை,

'வாள்தந்தனனே தலை எனக்கீய'

என்கிறார்! உடன் பிறப்பாம் அவனும், "அண்ணன் இறந்தாலும் ஈகையே உயிரானவன்" என உருகினான்! உருகினான்! அண்ணனோடு ஒன்றினான். இதற்கு,

**"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை"** - (203)

என்பது சான்றில்லையா?

பாடிய புலவனுக்குப் பரிசுப் பொருளில்லையே! இனி வாழ்வென்ன என்று பாம்புப் புற்றுள் கைவிட்டுக் கடியுண்டு சாக நினைத்தவன் அப்புற்றுள் திருடர் வைத்த பொன் கைக்கு வர அதனை எடுத்துப் புலவனுக்கு வழங்கிய வள்ளல் ஒருவன் வரலாறு பின்னே கேட்கப்படுவது! ஆபுத்திரன் அமுத சுரபி, உணவு கேட்டு வருவார் இல்லாமையால் தானே உண்டு வாழல் அறமன்று என்று உயிர்விட்டது மணிமேகலைச் செய்தி. விருந்து செய்ய இயலா வறுமையில் விருந்து வரக்கண்டு கதவை மூடிக் கொண்டு தன் ஈகைக்குத் திரையிட்டுக் கொண்ட வரலாறும் தமிழகம் கண்டது.

வள்ளுவம் வாழ்வியல் நூல்! வாய்மை யற நூல்! அதனால் அதன் உரை பொய்ப்பதில்லை! சான்று வேண்டு மெனில், தேடினால் எவர்க்கும் கிட்டும் என்பது தெளிவு.

# 14. இரத்தலும் ஈதலே

'இரவு' என்றோர் அதிகாரம்; 'இரவச்சம்' என்றோர் அதிகாரம். இரந்தும் வாழும் வகையில் ஆட்சி அமைப்பு இருப்பின் அவ்வாட்சி அமைப்பை உருவாக்கியவன் அழிந்தொழியட்டும் என்பதை,

**"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்"** - (1062)

என்றவர் வள்ளுவர். அவரே, "இரப்பவர்களே, யான் உங்களிடம் இரக்கிறேன்; எவரிடமும் சென்று எதையும் கூறி மானங்கெட இரவாதீர்" என்றவரும் அவர்.

**"இப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
**கரப்பார் இரவன்மின் என்று"** - (1067)

என்பது அது.

அவரா, 'இரத்தலும் ஈதலே' என்கிறார் என எண்ணத் தோன்றும்! ஆம்! மெய்யாகவே இரத்தலும் ஈதல் தான்!

இரப்பவர் எல்லாரும் வறியரா? உடற்குறையரா? வாழ வகையே அற்றவரா?

அந்நாளில் அரசு, புலமையர் கூடி ஆய்வு செய்ய - நூல் அரங்கேற்றம் செய்ய - கூடல் - புணர் கூட்டு - அவையம் எனக்கண்டது. சங்கம் எனப் பின்னே பெயர் பெற்றது. அக்கால இலக்கிய இலக்கணக் கொடைகளை ஆய்ந்து தொகுத்து வகைப்படுத்தி வருங்கால வழிமுறைக்குக் கிடைத்தற்கரிய பொன்னாய் மணியாய் முத்தாய் வயிரமாய் - தொகை தொகையாய் வழங்கியது. இவர்கள் அனைவரும் இரவலரா? மொழித் தொண்டும் - கலைத் தொணடும் - வரலாற்றுத் தொண்டும் - அறத் தொண்டும் - அருள் தொண்டும் புரிந்தவர்கள் அல்லரா? அவர்களுக்குப் பள்ளி வைத்துப் பாடம் புகட்டி - கற்பிக்கும் வேலை தந்து - சம்பளம் வழங்கியதா அரசு?

கல்விப்புலமை, கலைப்புலமை முதலியவற்றை அருமையாகத் தேடியும் பரப்பியும் ஆக்கத் தொண்டு புரிந்த அவர்கள் அரசர்களைப் பாடவில்லையானால் அரசர் வரலாறு உண்டா? மக்கள் வரலாறு உண்டா? கலை வளப் பேறுகள் வாய்த்திருக்குமா?

புலவர்கள், பாணர்கள், கூத்தர்கள், விறலியர், கணியர் என்பார் இருந்து ஆற்றுப்படை, பாடாண்பாட்டு, செவியறிவுறூஉ முதலாகப் புறப் பொருளும் இயற்கை இயங்கியல் அறவாழ்வாம் அகவாழ்வும் பாடாதிருந்தால் 'செவ்வியல் மொழி' நம்மொழி என்னும் நிலை எய்தியிருக்குமா?

இவர்கள் அனைவரும் தொழில் செய்யாதவர்களா? தொழில் தெரியாதவர்களா? கூலவாணிகன், பொன்வாணிகன், பண்ட வாணிகன், பாலாசிரியன், இளம்பாலாசிரியன், ஆசிரியன், பேராசிரியன், கணியன், காவல் கடமையர், குயத்தொழிலர், கொல்லுத் தொழிலர், தச்சர், அறுவைத் தொழிலர் (துணி), வேட்டுவராம் எயினர் – என எத்தனை தொழிலர்! இவர்கள் கொடை இல்லாக்கால், நம் மொழி நிலை எப்படி இருந்திருக்கும்! இவர்கள் பாடிப் பெற்ற பரிசில், இரவல் இல்லை! 'இல்லை' என்பாரை மதித்தது இல்லா மானப்புலவர், எத்தனை பேர்? 'இவர் வந்து பாடினர் இலரே' என ஏங்கிக் கிடந்த வேந்தர், வேளிர், வள்ளன்மையர் எத்தனை பேர்!

அவர்கள் வழங்கிய கொடை பிச்சைப் பொருளா?

யானைமேல் ஏற்றி உலாக் கொள்ளச் செய்து அது சுமக்கும் பொன்னும் பொருளும் அல்லவோ வழங்கினர்.

காக்கை பாடினியார்க்கு ஒன்பது கா(துலாம்) பொன் பரிசாம்!

பாரியின் முந்நூறு ஊரும் பரிசிலர் கொண்டனராம்!

பட்டினப் பாலைக்குக் கரிகாலன் வழங்கியது பதினாறு நூறாயிரம் பொன்னாம்!

எத்தனை கொடைகளை எண்ணுவது?

ஊரும் பேரும் சொல்லாமல் வழங்கிய கொடைமைதான் எத்தகையது! இதனால் தானே வள்ளுவர்,

> **"இரத்தலும் ஈதலே போலும் கரத்தலைக்**
> **கனவிலும் தேற்றாதார் மாட்டு"** – (1054)

என்றார். மேலும் எண்ண வேண்டும்!

கரப்பிலாது இரந்து பொருள் பெற்றவர் அனைவரும் தமக்கெனவா கொண்டனர்? இரவலராக இருந்தவர் பொருள் பெற்ற அளவில், புரவலர் ஆகிவிடவில்லையா?

"இனிய மனைவியே, நமக்குக் கொடுத்தவர்க்குக் கொடு; கொடாதார்க்கும் கொடு; இவர்க்கு அவர்க்கு என்னாமல் எவர்க்கும் கொடு; என்னிடம் கேட்க வேண்டும் என்பது இல்லாமல் நீ விரும்புவார் அனைவர்க்கும் கொடு; இக் கொடை எப்படி வாய்த்தது என்று அவர்களும் அறியுமாறு "முதிரத்துக் கிழவன் நல்கிய வளன்" என்பதையும் மறவாமல் சொல்லியும் கொடு எனப் புகழும் வேண்டாப் புகழாளராக வாழ்ந்த புலவர்கள் இரப்பு இரப்பாகுமா? ஈதலாகுமா?

அறத்திற்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும் கொடைஞர் - அறத்தால் ஈட்டிய பொருள் அறத்திற்கே என வழங்கும் கொடைஞர் இன்றும் இல்லாமையாகிவிட வில்லையே! அதனால் தானே வள்ளுவர்,

**"இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று"** - (1058)

என்றார்!

இலவயம் வழங்கி உழைப்பைக் கெடுக்கும் கொடை இல்லை இது.

கலைநலம், கல்வி நலம், வரலாற்றுநலம் கொழிக்கத்தந்த கொடை;

குடியைக் கொடுத்துக் குடியைக் கெடுத்து அவ்வருவாயில் கொள்ளையடித்துக் கொண்டு இலவயமாக வாக்குப் பொறுக்கியாகிச் செய்யும் குமுகாயக் கேட்டுக் கொடை இல்லை! அது.

இரவலரைப் புரவலனாகக் கொண்ட கொடை!

நாட்டுக்கும் ஏட்டுக்கும் ஒருங்கே வழங்கி

உயர்த்திய ஈதல் கொடை:

# 15. அறிதோ றறியாமை

அறிதோறும் அறிவுதானே கூடும்! அறியாமையாகிவிடுமா? அறிவு அறியாமையை ஆக்குமா? அப்படியானால் அறிவானேன்? புதிது புதிதாகக் கற்றுப் பெறுவது, கேட்டுப் பெறுவது, சிந்தித்துப் பெறுவது, பட்டறிவால் பெறுவது என்பவை எல்லாமும் அறியாமைக்காகவா?

இவ்வளவு வினாக்களும் மேற்போக்கில் சரியானது தான்! ஆனால் வள்ளுவ நோக்கு ஆழ்ந்து அகன்ற நுண்ணிய நோக்கு! அல்லது நுண்மாண் நுழைபுல நோக்கு!

அந்நோக்கு நமக்கும் உண்டானால் வள்ளுவர் எவ்வளவு தெளிந்து தேர்ந்து சொல்கிறார் என்பது விளக்கமாம்!

புதுவதாகக் குற்றாலம் செல்கிறான் ஒருவன்.

பேரருவி, சிற்றருவி, செண்பக அருவி, தேனருவி, ஐந்தருவி, புலியருவி, பழைய குற்றால அருவி எனக் காண்கிறான்! மலை முகடுகளில் மஞ்சின் மூட்டம், மழைச்சாரல், அருவித் தூவானம், அருவி ஆடுவார் மகிழ்ச்சி, குரங்குக் கூட்டம், கோயில் வளாகம், பல்வகைக் கடைகள் என எல்லாம் எல்லாம் காண்கிறான்! கடைசியில் என்ன சொல்கிறான்?

'இந்த அருவிக் காட்சிகளை இதுவரை அறிந்திலேனே!' என வாய்விடுகிறானா இல்லையா?

கடலே பாராதவன் கடலைக் கண்டால்!

வானூர்தியில் ஏறாதவன் வானூர்தியைக் கண்டால்! ஏறினால் - பறந்தால் - அதுவரை அவற்றை அறியாமையை உணர்வானா மாட்டானா?

காசுமீரம் செல்கிறான்! சீர் நகரை, தால் ஏரியை, படகுச் செலவை, இமயப் பகுதியைக் காணக் காணக் காணாமைகளைக் கண்டு களிப்புறுகிறான் அல்லவோ!

புதிய வரலாற்றைப் படிக்கிறான்! புதிய கதையைப் படிக்கிறான்! இவற்றை இப்பொழுது தானே அறிந்தேன்; முன்னர் அறிந்தேன் இல்லையே என்கிறானா இல்லையா?

தாசுமாலைப் புதிதாகப் பார்ப்பவன், அசந்தா, எல்லோரா, நாளந்தா, யானைக் குகை என்பவற்றை - வெளிநாடுகளைப் - புதுவதாகக் காண்பவன் காணாதவற்றை அறிகின்றான் அல்லவா! அந்நிலையில் அறிய அறியத்தான் அறியாமை வெளிப்படும் என்பது அவனுக்குத் தெளிவாம்.

அறிதோ றறியாமை என்ற அளவில் நின்றார் அல்லரே, திருவள்ளுவர். அடுத்த பகுதியை உரைக்க அல்லவோ இதனை உவமையாகக் கூறினார்.

**"அறிதோ றறியாமை கண்டற்றால் இன்பம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு"** - (1110)

என்பது முழுக்குறள்.

நல்ல மனைவி! உயர்ந்த பண்பு! இனிய இயல்பு! புரிந்து கொண்டு போற்றும் புகழ்நிலை; விருந்தோம்பல் பண்பு; பொருளியல் புரிவு; மக்கள் நலம் பேணல்! இப்படி ஒன்றில் இருந்து ஒன்று வளர்ந்து செறிந்து சேர்ந்து நிற்றல் எத்தகைய இன்பப் பேறாம்! இவ்வெல்லாப் பண்புகளும் தொடக்கத்தே அறிந்தானா? அறிய வாய்த்ததா?

புதிய புதிய அறிவுநலம் பண்புநலம் குடும்பநலம் அறிய அறிய முன்னர் அறிந்தவை எல்லாம் அறியாதவை யாகிவிடுகின்றன அல்லவா!

மணநாளில் கண்டதும் கொண்டதுமாம் இன்பம், படிப்படியே மேலேறி மணிவிழா, முத்துவிழா, பவழவிழா, வயிரவிழா நூற்றாண்டு விழாக் கண்டு பாவேந்தர் கண்ட 'முதியோர் காதலாய்' முருகி நிற்கும் போது, நாளும் பொழுதும் அறியாமை இன்பத்திலே அறிந்த இன்பம் ஆக்குதல் உறுதிதானே!

'வதுவை நாளினும் இனியன்'

எனத் தன் கணவனை மதிப்பிடலும்,

'நிழலின் நீங்கா என் வெய்யோள்'

எனத் தன் மனைவியை மதிப்பிடலும்

முதுமையில் ஆயிரம் பிறைகண்ட நாளில் புலப்பட்டால், அவர்கள் எத்தகைய அறிதோ றறியாமை கண்டவர்கள் என்பது தெளிவாம்!

'அறிதோ றறியாமை' தானே உலக வளர்ச்சி மூலம்! அன்று கண்ட விளக்கா, இன்று காண்பது? எத்தனை மாற்றம்? அன்று கண்ட ஊர்தியா, இன்று காண்பது? எத்தனை மாற்றம்? உண்டி வகையில் - கலைவகையில் - பொறி வகையில் - உடை வகையில் - இல்ல அமைப்பு வகையில் ஆயிரம் ஆயிரம் மடங்கு வளர்ச்சி இல்லையா? ஆக அறிவியல் இலக்கணம் என்ன என்றால்,

'அறிதோ றறியாமை'

என்பது தானே சுருக்கத்தில் பெருக்கமாம் விளக்கம்!

❖❖❖

# 16. மறத்திற்குமா அன்பு?

அன்பு, உயர்பண்பு, இல்லறப் பண்பே, அன்புதான் என்பது வள்ளுவம், அன்பே வாழ்வின் உயிர்! அவ்வன்பு வாழ்வால் உடலுக்கே உயிர்நிலை அன்பு என்பதை "அன்பின் வழியது உயிர்நிலை" என்பது அன்பின் சுருங்கிய பொருள்; தன்னலம் இன்மை. அதன் விரிபொருள்.

"தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெருந்தகைமை" அன்புப் பிடியுள், அகப்படாத மலையே இல்லை என்னும் போது மற்றையவை எவை அகப்படாமல் போகும்?

அன்பின் இருக்கையாய் ஆவதே அருட்பெருக்கம்! அருட்பெருக்கு ஆதல். இறை நிலையாம் நிறை நிலை! ஆன்ம நேயம் அது; மாந்த நேயத்தினும் உயர்நிலை.

அவ்வன்பு கொடுமைக்கும் - வன்முறைக்கும் - ஆகும் என்பது வள்ளுவமாயின் ஒப்புவது கடினமாக இல்லையா? ஆனால் வள்ளுவர்,

> "அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாம் - சார்பாம் -
> என்பவர் அன்பின் இயல்பு அறியாதவர்"

என்று திட்டமாக உரைக்கிறார்.

> **"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு"** (72)

என்றவர் தாம் அவர். அவரே, அறத்திற்கு மட்டுமே சார்பு என்பவரை அறியாதவர் என்றால் உண்மை என்ன?

அவர் உரை, 'வாயுரை' மட்டும் அன்று 'வாயுறை'யுமாம் என்பது எவர்க்கும் தெளிவு.

தாய் நோயில் கிடக்கிறார். கையில் காசு இல்லை; கடனாக மருத்துவர் பாரார்! கடனாக மருந்து, கடைக்காரர் தாரார்! ஊட்டப் பொருள் தரத் தனக்கு வாய்ப்பு இல்லை! தட்டிக் கழிக்கத் தன்னைப் பெற்றவள் என்னும் உணர்வு விட்டு வைக்க வில்லை. அறவர் சொல்லலாம்! அறிவர் சொல்லலாம்!

**"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை"** - (656)

என வள்ளுவரே சொல்லலாம். ஆனால், பெற்றவளைக் காக்க நினைக்கும் அவனுக்கு அவையெல்லாம் தடையாகத் தோன்றவில்லை! தட்டிப் பறிக்கிறான்; ஆம்! வழிப்பறி செய்கிறான்! செய்யாதன செய்து, செய்ய வேண்டியதைச் செய்தல் குற்றமில்லை எனத் துணிகிறான்!

ஒரு கோயிலை இடித்து அக்கல்லால் இன்னொரு கோயில் எழுப்புவது குற்றமில்லை என ஓர் அடியான் நினைக்கும் போது, பொருள் மலையின் மேல் மலையாய்க் கொள்ளை யடிப்பே தொழிலாக இருப்பவன் இருக்கும் போது தன்னலம் இன்றித் தாய் நிலைக்காகத் தட்டிப் பறிப்பது குற்றமாகுமா? எனத் துணிச்சல் உண்டாகிறது.

சமயத்தின் பெயரால் - கடவுள் பெயரால் - தன்னைப் போலும் ஒருவன் கழுத்தை அறுக்கலாம் என்றால் தாயன்பால் களவு செய்தால் தவறா? பார்வையில் அறமல்லாச் செயலே - மறச் செயலே - பாவச் செயலே!

இதற்கு அடிப்படைத் தூண்டல் அன்புதானே! அதனை எண்ணாமல் விடலாமா?

தன்சிறு பிள்ளையைத் திருடி ஒருத்தி தெரியாமல் தூக்கிக் கொண்டு ஓடுகிறாள்! ஈன்ற அணிமைப் பச்சை உடம்புத் தாய், படுக்கையில் கிடந்தாலும் பார்த்துக் கொண்டு கூச்சலிட்டுக் குந்தி இருக்கிறாளா? பாயும் புலியாகப் பாய்ந்து கிடைத்ததை எடுத்துப் புடைத்துத் தள்ளித் தன் பிள்ளையைப் பறித்து அள்ளி முத்தமிட்டுக் கொண்டு வந்து காளியும் கொற்றவையும் காட்டேறியும் காவல் தெய்வமும் நானே என நிற்கிறாளா இல்லையா?

அவளுக்கு அத்துணிவு - வீறு - மறம் எப்படி வந்தது?

தன்பிள்ளை என்னும் அன்பால் தானே!

ஆறறிவுத்தாய் இருக்கட்டும். அந்தக் கோழியைப் பாருங்கள்! குஞ்சுக்கு இரை கிளறித் தருகின்றது. குஞ்சைக் கொண்டு போக வானில் வட்டமிடுகிறது பருந்து! மனிதன் வேண்டுமானால் மதிகெட்டு, கண்ணன் ஊர்தி என்னக் கன்னத்தில் தட்டிக் கொண்டு நிற்கலாம். குஞ்சு, பருந்தின்

வாயுள் போய்விடக் கூடாது என்று தன்னால் பறந்தடிக்க முடியும் என்பதைப் பாய்ந்தடித்து மீட்டுகிறதே! அந்த வீரம் மறம் தானே!

எண்ணுகிறார், அன்பு அறத்திற்கு மட்டுமன்று, மறமாம் பாவத்துக்கும் வீரத்துக்கும் துணைதான் என்று தெளிவு செய்கிறார்! மொழிப்பற்றால் - நாட்டுப்பற்றால் - இனப்பற்றால் - குடும்பப் பற்றால் - தன்மானப்பற்றால் தம்மை அழித்துக் கொண்டவர் தம்மை எண்ணி முடியுமா? காலமெல்லாம் எண்ண வைப்பவர்கள் அல்லரோ அவர்கள். அன்பினை ஆழ்ந்து எண்ணினால்,

**"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை"** - (76)

என்பது தெளிவாம்.

# 17. வளத்துள் வறுமை

வளமான குடும்பம் என்றால் செல்வக் குடும்பம் என்பதே பொதுப் பொருள். நீர்வளம் நிலவளம் பயன்வளம் எல்லாம் ஒருங்கே உடைமையால் மூவேந்தருள் சோழர் வளவர் எனப்பட்டனர்.

உடைமை என்பது வெளிப்படப் பொருள் உடைமையையே குறிக்கும். பொருள் உடைய ரெல்லாம் உடையரா?

"உள்ளம் உடைமை உடைமை" என்றாரே வள்ளுவர்.

எல்லார் உடைமையும் பாராட்டப் படுகிறதா?

"பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள" எனப்பழிக்கப் பட்ட துண்டே!

உடைமை மலைபோல் இருந்தாலும் – குவிந்து கிடந்தாலும் – அக் கருங்கல்லிலும் கல்லாம் உள்ளத்தரும் இல்லையா? 'கருமி' என்பது, 'தருமி' என என்றாவது பாராட்டப்படுமா?

எங்கள் ஊருக்கு வந்து ஊர்மடத்திலே பசியோடு படுத்திருந்தாலும் இசையோம் என்று எழுப்பிவந்து அயலூராரை உண்ணச் செய்வார் உண்டே!

அல்லில் ஆயினும் அல்லலைப் பார்க்காமல் விருந்தாக்கியுதவும் நல்லியல் மெல்லியலார் மல்கியது உண்டே!

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"** – (322)

என வள்ளுவர் கூறுகிறார் என்பதைப் படித்தோ விருந்தோம்பு பண்பு மகளிர்க்கு ஏற்பட்டது! மண்ணின் மணமே அதுதானே! அதனால் தானே, இயல்புடைய மூவர் (தாய், தந்தை, மனைவி) துறந்தார், துவ்வாதார், இறந்தார்; தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல் எனப் பதின்மரை ஓம்புதலை இல்வாழ்க்கை முதல் மூன்று பாடல்களிலும் மொழிந்தார் வள்ளுவர்.

விருந்தாளர் ஒருவர் வரக்கண்டால் தங்கள் ஊடலையும் மறந்து உரிமையுடன் விருந்தோம்பும் பண்பை அறிந்து தானே தொல்காப்பியர்

**"விருந்து கண்டு ஒளித்த ஊடல்"** என்றார். செல்வவளம் பெற்ற பயன், பசித்தவர்க்கு உணவு தரல். வயிறாம் வைப்பகத்தில் நிலை வைப்பாக வைத்தல் என்பதை,

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி"** - (226)

எனப்பட்டது. திருவள்ளுவர் விருந்தோம்பலை எங்கு வைத்தார்? அன்புடைமைக்கு அடையாளமே அதுதான் என்பதை விளக்கும் வகையால் அடுத்த அதிகாரமாகவே வைத்தாரே!

அன்புடைமைச் சான்றாம் விருந்தோம்பல் உடைமையை இல்லார் எத்தனை எத்தனை பொருளுடையார் ஆயினும் உடையர் அல்லர். அறிவுடைமை அருளுடைமை முதலாம் உடைமை உடையரும் அல்லர். அவர் 'மடையர்' எனப் படற்குரியர் என்பதால்,

**"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடைமை"** - (89)

என்றார், என்ற அளவில் இல்லாமல் - நில்லாமல் - இம்மடைமை "மடவார்கண் உண்டு;" இம்மடைமைத் தன்மை மடையர் எவரோ அவரிடத்தேயே உண்டு என்றார்.

மடையர் என்பது சோறே குறியாக வாழ்வார் என்னும் பொருளதாம். அறிவற்றவர் மட்டுமல்லர்? தாம் தின்னியர் என்பதுமாம். அதனால்தான்,

**"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"** - (82)

என்றார்.

சாவாமைக்குக் காரணமாகிய உயருணவு, உயர்மருந்து. இதற்கு வேறொரு பொருளும் கண்டார் அரசஞ் சண்முகனார்:

"விருந்தினரைப்புறத்தே வைத்துத் தானே தனித்துண்டல்
செத்தவன் வாயில் போடும் வாய்க்கரிசி போல்வது"

என்று நடைமுறை வழக்கைக் காட்டினார்.

**"ஒப்புடன் முகமலர்ந் துபசரித் துண்மைபேசி**
**உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்**
**முப்பழமொடு பாலன்னம் முகம்கடுத் திடுவராயின்**
**கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும்தானே"**

என்பது ஔவையார் தனிப்பாடல்.

ஒரு புலவன் பசியோடு கிடக்க ஒருசெல்வன் உண்டு ஏப்பமிட்டுக் கொண்டு வந்தான். அவன் பெயர் நமசிவாயம். பாடினான் புலவன்.

**"புட்டவல் பட்டாணி பொரிதேங் குழலப்பம்**
**மட்டவிழும் தோசை வடையுடனே - சட்டமுற**
**ஓயாமல் சோறுகறி உண்டையுண்டை யாய்அடைக்கும்**
**வாயா நமசிவா யா"**

என்பதும் தனிப்பாடல். உடைமை உடைமையாகத் திகழ்தல் உள்ளமுடைமையால் ஆவது!

# 18. வசையிலா வறுமை

பணத்தைக் கொண்டே மதிப்பிடும் உலகம் இது. மணப்பெண்ணின் மண்டையில் மண்ணிருந்தாலும் இருக்கட்டும்; கழுத்திலும் காதிலும் கையிலும் பொன்னிருக்க வேண்டும் என்னும் உலகம் இது என்பார் மு.வ.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது எவரும் அறிந்தது. ஏழையைக் கண்டால் மோழையும் (கொம்பில்லாத கடாவும்) பாயும் (முட்டும்) என்பது பழமொழி.

புலமைக்குக் கூட, 'பொன்மதிப்பு' ஒரு பெருமதிப்பு என்பதை,

**"விரகர் ஒருவர் புகழ்ந்திடவே வேண்டும்**
**விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்- அரையதனில்**
**பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை**
**நஞ்சேனும் வேம்பேனும் நன்று"**

என்பது ஒரு தனிப்பாடல்.

இத்தகைய உலகியலில் வசையிலா வறுமையும் உண்டு என்றால் சிந்திக்கத் தூண்டுகிறது அல்லவா!

ஓராசிரியர் தொடக்கப்பள்ளி ஆசிரியர். மனைவிக்கு மஞ்சள் கயிறும் இல்லை! அவர் சம்பளம் மாதம் 16 உருபா! அதற்குள் செட்டாகக் குடும்பம் நடத்துவார். வறிய குழந்தைகளுக்குப் புத்தகம் கற்பலகை எனத் தம் வருவாயில் ஒரு பகுதி செலவிடுவார். தம் மக்களையும் தக்கவகையில் இயல்பாக எளிமையாக வாழக் கற்பித்துத் தந்தார். நன்றாகக் கற்கவும் வைத்தார்.

மேல்நிலைக் கல்விக்கு அவர் உதவியை நாடிவருவர் சிலர். அவர் வருவாய் இடம் தருமா? தகுதிவாய்ந்த செல்வரை அணுகுவார். நிலைமையைக் கூறுவார். உதவுவாரை அன்றி உயர் செல்வர் எவரையும் அணுகார்! அவரையும் மதியார்!

ஆசிரியர் தம்மை நாடிவந்தால் ஏதோ ஒரு நல்ல செயலுக்கு உதவி கேட்டுத் தான் வருகிறார் என்பது புரியும் தன்மையர் எவரோ அவரையே நாடுவார்! தட்டாமல் உதவியும் புரிவர். அவர் இயல்பை அறிந்தவர்கள் அவர்கள்.

பொது அறத்திற்காகச் சீட்டுப் பிடிப்பார்! செலவு ஒரு காசும் எடார்! சீட்டுப் பிடிப்பதற்கு வரும் தொகையைக் கொண்டே திருவள்ளுவர் மன்றத்திற்கு இடம் வாங்கினார்! கட்டடம் கட்டினார்! நூலகம் அமைத்தார்! பேருள்ளம் உடையவர் ஓரளவு செல்வர் முழுதுறு ஒத்துழைப்புப் புரிந்தார்! இருவரும் கூடி அரும்பணி பல செய்தனர்! குடும்பத்தையும் தம்மைப் போலத் தொண்டுக்கு உதவும் வகையில் வளர்த்தார்! ஏதிலியர் பள்ளி - மலைவாழ் மக்களே பெரிதும் பயிலும் பள்ளி அமைத்து இலவயமாய்ச் செல்வர் நடத்தினார். அதற்குத் தக்க துணையானார்!

ஆசிரியர் பெயர் செல்வநாயகர்!

செல்வர் பெயர் பொன்னையா! பெருஞ்செல்வரா அவர் எடுபிடி ஆளாக இருந்து கடிய முயற்சியால் அரிசி ஆலைப் பங்காளியாக வளர்ந்தார். வளர வளரத் தொண்டிலும் வளர்ந்தார்! எங்கே எங்கே எனத் தேடவேண்டா! விருதுநகர் மாவட்டம் இராசபாளையத்தில் தான்! திருவில்லிபுத்தூர் மேல்மலை செண்பகத் தோப்பில்தான் பள்ளி!

கோடிச் செல்வரும் இணையாவரா, தேடித்தேடி உதவிய

செல்வநாயகருக்கும் பொன்னையாவுக்கும்!

அவர்கள் இருவரும் கொடுத்துக் கொடுத்து வறுமையராகவே இருந்தனர்! வறுமையரைக் காக்கும் காவல் தெய்வ வறுமையராகவே எளிய வாழ்வு வாழ்ந்தனர்! தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்தார் வறுமை, மற்றையர் போல் இழிமை - பழிமை - கழிமை - வறுமையர் எனப்படுவரா? கொடுத்து அல்லவோ வறுமையைக் கொண்டனர்!

ஒருவர் வருகிறார்! கையில் தடித்த கம்பு! தட்டு, தட்டு என ஒலியெழ வருகிறார். முதலியாரே ஒருபத்துரூபா வேண்டும் என்கிறார்! முதலியார் என்ன செய்வார்! கையில் காசு - பையில் காசு - வைத்துக் கொள்ளாதவர். அண்ணனாரிடம் செல்கிறார். நிலைமையைச் சொல்லிப் பத்து உருபா வாங்கிக் கொண்டு வந்து தருகிறார்! உம் அன்னை - எங்களுக்கு அன்னிய - பெசண்டு எப்படி இருக்கிறார்! நீர் விளக்கெண்ணெய்யை வெண்டைக் காயில் தோய்த்து எழுதிய தலையங்கம் கண்டேன் என்கிறார்! புன்முறுவல் பூக்கிறார் முதலியார்! ஆம், நம் தமிழ்த் தென்றல் திரு.வி.க; அவர் சுப்பிரமணிய சிவா! இந்த வறுமை வறுமையா?

"சிவம், இந்தப் பத்து ரூபாயில் 9¾ உருபாயை நாட்டுக்குச் செலவிடுவான்! கால் உரூபாய் அவன் வயிற்றுப் பாட்டுக்கு" இவனை இப்படிக் கையேந்தும் நிலையில் வைத்துள்ள நாடு உருப்படுமா என்றார் திரு.வி.க. இன்று நாட்டின் உழைப்பாளர் எல்லாரும் - உழவர் தாமும் - கையேந்தியர் ஆகச் செய்கின்றனர் - செய்துவிட்டனர் அரசியல் புரட்டர்கள்! நாடு உய்யுமா? என நாம் கேட்கும் நிலையிலா உள்ளோம்?

'வசையிலா வறுமை யார்க்கு வாய்க்கும்?

கோடி கோடியாய்க் குவிக்கும் கொள்ளையனுக்கு வாய்க்குமா?'

**"வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசை என்னும்**
**எச்சம் பெறாஅ விடின்"** - (238)

**"கெடுவாக வையா துலக நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு"** - (117)

என்னும் வள்ளுவங்களைக் காண்க.

வையாது - வைக்காது; வசை கூறாது என்னும் இருபொருளும் தரும் சொல்.

தாழ்வு - வறுமை

அவனோ நன்றிக்கண் தங்கிக் கோலோச்சும் நல்லோன்!

அவனை நன்னாவார் வசை கூறுவரா?

பிழைக்கத் தெரியாத பேயன் எனச் சொன்னால், அவர் காது கொடுத்துக் கேட்பவரா?

பெருமையும் பெருமிதமும் உடைய வறுமை அல்லவோ அவர் வறுமை!

# 19. ஆக்கமாகா ஆக்கம்

ஆவதுதானே ஆக்கம். ஆகாதது ஆக்கம் ஆகுமா?

ஆக்கம் என்னும் பெயரே அதற்கு ஆகாதே!

ஆக்கம் என்பானேன்? அதற்கு ஆகாத ஆக்கப்பெயர் சூட்டுவானேன்?

**"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்"** - (169)

என்கிறதே குறள்.

பொறாமையன் வளமையும், செம்மையன் வறுமையும், வளமையும் வறுமையும் தாமா?

நல்லோன் வளமை அல்லவோ ஆக்கம்!
அல்லோன் வறுமை அல்லவோ வறுமை!

இவையென்ன மாறான முறையாக மக்களிடம் உள்ளதே!

இவர்கள் ஆக்கத்தையும் வறுமையையும் எண்ணிப்பார்க்க மாட்டார்கள் போலும் மக்கள். எண்ணிப் பார்த்தால் தானே வளமையா, வறுமையா என்பது புலப்படும் என நினைக்கிறார் வள்ளுவர்.

பணம் சேர்த்தவன் எல்லாம் எத்தகு பாவ வழியில் தேடினாலும் அவன் பணக்காரனா? பணத்தால் பணக்காரனாகப் பளிச்சிடலாம். பணக்காரப் பண்பு அவனிடம் உண்டா?

பணம் இல்லாதவன் எல்லாம் வறியனா? அவனை வறியன் என அவன் நினைப்பானா? பிறரும் நினைப்பரா? அவன் அறவோனாக விளங்குவோன் அல்லவோ!

மேலோட்ட மதிப்பு வேறு! அகநோக்கு மதிப்பு வேறு!

ஆடாத ஆட்டமெல்லாம் போட்டு வறியன் ஆனான் என அறவனை எவனேனும் சொல்வானா?

தேடாத வகையெல்லாம் தேடிக் குவித்த தீயனை நல்லோன் திருவாளன் என மதிப்பானா?

அவனை வறியன் என்றால் என்றவன் தீயன்!
இவனை வளவன் என்றால் அவன் அடிதாங்கி!

இவை தானே உண்மை!

இவ்வுண்மை விளக்கத்தை எண்ணித் தாமே தெளிவார் தெளியட்டும்! தெளிய மாட்டாதார் உளர் அல்லரோ! அவர்க்குத் தெளிவுறுத்தல் எம்கடன் எனக் கொண்ட வள்ளுவர், 'ஒழுக்க மில்லானுக்கு உயர்வு உண்டா?' என ஒருவினாத் தொடுத்தார். நற்குடிப்பிறப்பின் அடையாளமே ஒழுக்கம் தானே! அவ்வொழுக்கம் இல்லாமை நற்குடியனை இழிந்த குடியினன் ஆக்கத்தானே செய்யும்.

**"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்"** - (133)

என்றார். இழிந்த குடிப்பிறப்பு! இழிந்த சாதி என்பது அன்று! ஏனெனில் பிறப்பொக்கும் என்று வரையறுத்தவர் சாதியைச் சுட்டார் என்பதை, அறிந்தே உரைகாணவேண்டும்! இழிந்த பிறப்பாவது ஆறறிவில் குறைந்த பிறப்பு!

ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வு இல்லாமை போலப், பொறாமையுடையவனிடம் இருக்கும் செல்வமும் செல்வம் இல்லை.

**"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
**ஒழுக்க மிலான்கண் உயர்வு"** - (135)

என்று உவமையாகவே தெளிவித்தார்.

முன்னமே, 'ஒழுக்கமுடைமை' அதிகாரத்திலேயே விடையை விளங்கச் செய்துவிட்டுப் பின்னே அழுக்காறாமை அதிகாரத்திலே எண்ணச் சொன்னார்! எண்ணாமல் மனம் போல் உரைகண்டால், கண்டவர் காட்சியே அதுவாம்!

ஒழுக்கமிலானுக்கு உயர்வு இல்லை. அழுக்காறுடையானுக்கு எவ்வளவு செல்வம் இருந்தாலும் உண்மையில் செல்வம் இல்லை! செல்வத்திற்கு உரிய மதிப்பைப் பெறாமல் குப்பைக் குவியலாய்க் கொள்ளப்படும்.

அவனுக்கும் பயனாகாது; பிறர்க்கும் அவன் உயிர் உள்ளவரை பயன் ஆகாது. எந்த ஆக்கத்திற்கும் ஆகாதது ஆக்கம் எனப்படுமா?

செல்வப் பயனை இழப்பது மட்டுமன்று! சிறுமையையும் அல்லவோ சேர்க்கிறது! பிறகு ஆக்கம் ஆகுமா?

வறியவன் தான் வறியன் என எண்ணுவானா? இந்த இந்த நலங்களைச் செய்ய இயலவில்லையே என்று அவன் எண்ணுவதை அன்றி அவனுக்கு என்ன வறுமை? வறியவன் என வசைப்பாரும் இருப்பரா?

**"நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும் நீர**
**செய்யா தமைகலா வாறு"** - (219)

என்பது மேலும் தெளிவாக்கும் வள்ளுவம்.

❖❖❖

## 20. இருந்தவன் இல்லாப் பெருமை!

**"நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறச்**
**சென்றான்"**

என்பது நாலடியார். (29) நிலையாமையைக் கூறுவது!

"காயமே பொய்யடா காற்றடைத்த பையடா!"

எவரும் சொல்லும் வழக்கவுரை.

"மணப்பறையே பிணப்பறையாய்"

இது திருவிளையாடல்!

இவையெல்லாம் வாழ்வை நிலையாக நினையாதே என்பதைச் சொல்வன! கையறு நிலை இரங்கல் வகையவை.

வள்ளுவரும் நிலையாமையிலே தான் சொல்கிறார்.

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு"** - (336)

என்கிறார். இரங்கலாக - கையறு நிலையாக - ஒப்பாரியாக - இழவுப் பாட்டாகச் - சொல்லாமல் 'பெருமை' என்கிறார்.

நேற்றிருந்தவன் - என்னோடு உண்டு உரையாடி உவகை செய்தவன்! இன்று இல்லை! என்ன பெருமை பெற்று விட்டான் அவன்! என்பது இதன் விளக்கப் பொருள்!

இருந்தவன் இறந்தது பெருமையா?

இலக்கணர்கள் பார்த்தார்கள் 'காராட்டை வெள்ளையாடு' என்றும், 'நச்சுப் பாம்பை நல்லபாம்பு' என்றும் சொல்லும் வழக்கை மங்கலவழக்கு என்பது போல், இதுவும் மங்கல வழக்கு என அமைந்தனர். மங்கல வழக்காகவா கூறினார் வள்ளுவர்?

**"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்**
**ஆற்ற லதுவே படை"** - (765)

**"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"** - (269)

என்று கூற்றுக்குக் கூற்றாக அமையும் படைவீரரையும், நோற்றற் பேற்றரையும் எண்ணினால் மங்கல வழக்கு என எளிதில் தள்ளார்!

**"கன்னின்றான் எந்தை; கணவன் களப்பட்டான்;**
**முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்; - பின்னின்று**

**கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி,**

**எய்போல் கிடந்தான்என் ஏறு"** (புறப்பொருள் வெண்பாமாலை 176)

என்பதை எண்ணாமல் இரார்!

நிலையா வாழ்வை நிலைக்க - என்றும் நிலைக்க - வைத்தது பெருமையா சிறுமையா?

**"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**

**பெரும்படை வாழ்த்து"** - (1006)

என்னும் தொல்காப்பியமும்,

அதனையே வஞ்சிக் காண்டமாக்கிய சிலம்பும் கற்பார் மங்கல வழக்கென வாளா தள்ளார்!

ஏன்? அண்மையில் ஈழப்போர்க்கண் உயிர் துறந்தார் புதைப்பெல்லாம் புதைப்பா? வீரவிதைப்பா?

தற்கொலைக் குப்பியெனத் தாலியாய் வீரர் அனைவரும் வீரத்தியர் அனைவரும் அணிந்தவை 'தற்கொடை' வீறும் வெற்றியும் அல்லவோ?

**'பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்**

**பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்லும்'** (அகம் : 67)

பட்டவன் - அட்டவன் - நினைவகங்களும், ஒடுக்கங்களும் எண்ணின் என்ன தோன்றுகிறது! படையலும் விழாவும் வீழ்ந்து வணங்கும் பேறும் அல்லவோ கிளர்கின்றன!

மாற்றரும் கூற்றம் என்று உறுதிப்படுத்திய தொல்காப்பியர் தாமே "மாற்றரும் கூற்றம் சாற்றிய 'பெருமை' என்றார்!"

அப்பெருமை எப்பெருமை!

வள்ளுவர் எடுத்தாண்ட 'பெருமை' அல்லவா!

நேற்று இருந்தான் மாந்தனாக! ஆனால் அவன் இன்று அமரனானான்! வணங்கத்தக்க பேற்றைப் பெற்று அழியா நிலையுற்றான்! இப்பேற்றை அஞ்சி அஞ்சிச் சாவார் பெறுவரோ?

மெய்யை, மெய்யாக்கிய மெய்யன் பெருமை அல்லவோ அது என எண்ணினால் எத்தனை வீறுமிக்க மணிகளும் பவழங்களும் வயிரங்களும் அடங்கிய பொற் பேழை வள்ளுவம் என்பது புலப்படும்.

இவை அரணா? முரணா? அரண் முரண்களா? என எண்ண வைக்கும் முத்திரைக் குறள்களுள் ஒன்றல்லவா!

❖❖❖

# 21. கயவர் திருவுடையர்

கயம் – பெரியது : ஆழ்ந்தது; இருண்டது; கீழ்மை மிக்கது ,மென்மை எனப்பல பொருள்தரும் ஒரு சொல்.

இவ்வெல்லாமும் தம்மைச் சார வாழ்ந்தவர் கயவர்.

"கயவாய்ப் புனிற்று எருமை"

என்பது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் வரும் தொடர். பெரிய வாய் என்னும் பொருளது. இவை முன்னும் கண்டது (கட்.10).

ஆழ்நீர்க் கேணி கயம் எனப்படும். நீர் இருப்பதும் தெரியாது. இருட்டுக் கசமாக இருக்கிறது என்பது மக்கள் வழக்கு. 'கயந்தலை' கலக்கிய சின்னீர் என்பது கலித்தொகை. மென்மைப் பொருளது. கன்று கயந்தலை என்பது மக்கள் வழக்கு. கயவர், சொல்லப் பயன்படாதவர்; அறைபறை அன்னவர்; எதற்கும் ஈயாக் கருமியர்; சிறியவர் சேர்க்கையர்; அச்சமே வாழ்வானவர்; தம்மையும் விற்பவர்; பிறர்நலம் காணப் பொறாதவர். இவை கயமை அதிகாரப் பிழிவு!

இத்தகு கயமையும் திருவுடையதா? கீழ்மையை அடுக்கிக் கூறிய திருவள்ளுவர் 'கயவர் திருவுடையவர்' என்று கூறுகிறாரா?

நல்லவை எவை என்பவற்றை எல்லாம் ஆய்ந்தும் தோய்ந்தும் அறிந்தும் புரிந்தும் வாழ்பவர் நயனுணர் பெருமையர். அந்நயனுடைய பெருமையர் பெறுதற்கு அரிய அல்லது பெறுதற்கு இயலாத பேற்றைப் பெற்றவர் கயவர். ஆதலால் நயனுணர்ந்த நல்லோரினும் கயவர் திருவுடையர் ஆவர் என்பதை,

**"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்**
**நெஞ்சத் தவல மிலர்"** – (1072)

என்கிறார்.

ஒருவர் ஐயோ என அரற்றுகிறார்!

அதைக் கேட்ட ஒருவர் அவர்க்கு என்ன நேர்ந்ததோ என்று துடிக்கிறார்.

குழல் அழுவது போல் ஒருவர் அழுகிறார், வழியே சென்ற சான்றோர் என்ன நேர்ந்ததோ அவர்க்கு என மெழுகாக உருகிச் சென்று அவலம் கேட்டுத் தீர்க்கின்றனர்.

ஒரு நோயர் – ஒரு பசியர் – துயர் கூறக் கேட்கின்றார் ஒருவர்; தம்மிடம் எவ்வகையிலும் உதவ வாய்ப்பில்லையே என அவரினும் ஏக்கம் கொள்கிறார்.

கொடுமையாகத் திட்டிக் கூந்தலைப் பிடித்து இழுத்துத் தெருவில் உதைக்கிறார்! தாம் பட்டபாடாய் ஓடிப் போய்த் தடுத்து உதையும் மிதியும் தாம் வாங்குகிறார்.

பாதுகாப்பான இடம் என்று அழைத்துப் போனவன் பாம்பாக மாறித் தீண்டிய நிலையில் தலைவிரி கோலமாய் ஓடித் தடுக்கிறார் ஒருதாய்!

இவர் அவர் என இல்லாமல் கொத்துக் குண்டால் போருக்குத் தொடர்பே இல்லாதவர் சாகடிக்கப்படுகிறார்கள். எக்கவலையும் இல்லாமல் உண்கிறார் – உடுக்கிறார் – உலாவுகிறார் வழக்கம் போல!

சாகும் வரை உண்ணா நோன்பு நாட்டு நலனுக்காக என ஒருவர் இருக்க, வழக்கம் போல் சிறிதும் கவலையற்று உண்டு உறங்குகிறார். ஏன்?

கயமையர்! கயமையே வடிவானவர்!

நல்லோர்க்குரிய நெஞ்சத்து அவலம் அவர்க்கு இல்லை! ஆதலால் அவ்வகையில் நன்றறிந்த நயனாளரினும் கயவர் பேறு பெற்றவர் இல்லையா! எத்தகைய பெரிய திருவாளர் அவர்! 'கயவர் பெருமை' காண்க(10).

❖❖❖

# 22. ஈகையன் துயர்

ஈகையன் எவன்?

"பாரிக்கு முந்நூறு ஊர்! முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்"

"யாமும் பாரியும் உளமே" என்பது கபிலர் பாட்டு.

ஆய் வள்ளலின் யானை மால்! ஓரியானையும் இல்லை! வெற்றிடமாக உள்ளது! பாடியும் ஆடியும் வந்தோர்க்குப் பரிசிலாக வழங்கி விட்டான்!

தன்னொடு தானாக விளங்கும் தன் மனைவியை அன்றி, மற்றவற்றையெல்லாம் வழங்கிவிட்டான் ஒருவள்ளல்!

இன்ன வண்மையர்க்கு ஈகை துயர் ஊட்டுமா?

ஈந்துவிட்டால் எதிர்காலம் என்னாம்? எம் வழிமுறை என்னாம்? என்னும் எண்ணங்கள் வாட்டுமா?

ஈகையன் 'வேண்டும் வேண்டும்' பொருள்கள் இல்லையே என்னிடம் என்னும் வறுமையனும் அல்லனே! ஈவதற்கு எதிர்நோக்கி இருப்பவனுக்கு, ஈதற்கு வேண்டுவ எல்லாமும் இருப்பவனுக்கு, ஈதல் இசைபட வாழ்தல் என இரண்டற்ற ஒருமைச் செயலனுக்குத் துயர் எப்படி உண்டாம்?

ஒட்டிய வயிற்றைப் பார்க்கிறான், உயர்ந்த பாவலன் அவன்! கட்டிய கந்தையைப் பார்க்கிறான். கலை வாழ்வே வாழ்வெனக் கொண்டவனுக்கு! முதுமையினால் வீட்டுத் திண்ணைக்கு வரவும் இயலா அன்னை! பானையைத் திறந்து பார்த்து வெறுமை கண்டு 'ஓ' வெனக் கத்தும் குழந்தை! பாலுக்கு ஏங்கி மார்பில் வாய் வைக்கப் பால் வராது, குருதி வரக் கொடுந்துயர் எய்தும் மனையாள்?

பலரையும் பாடியும் பயன்படாமல் வந்த பாவலன்!

இவர்கள் அனைவர் துயரையும் ஒருங்கே போக்கும் பொருள் வளம் தன்னிடம் இருக்கவே செய்கிறது! உளமும் முந்து நின்று உதவவே துடிக்கிறது! ஆயினும் கொடை வள்ளல் உள்ளத்தில் துயர் ஊஞ்சலாட்டம் போடுகிறது!

வறுமைக் காட்சிகளைக் காண்கிறான்!

வறுமைத் துயரைக் கேட்கிறான்!

வறுமையைப் போக்கத் துடிக்கிறான்!

வறுமையைப் போக்க வல்ல பொருளும், வேண்டும் அளவும் இருக்கவே இருக்கிறது!

பொருள் கையிலேயா உள்ளது? கருவூலத்தில் அல்லவோ உள்ளது! கருவூலக் காவலனும் பக்கல் நிற்கவே செய்கிறான்! அவன் திறவு கோலொடா நிற்கிறான்! திறவு கோலை எடுக்க வேண்டும்! காப்பு முத்திரை அகற்ற வேண்டும்! வேண்டும் பொருளை எடுக்க வேண்டும். எடுத்த பொருளை வள்ளலிடம் வழங்க வேண்டும்! அவ்வுதவுதலைப் பெற்ற பின்னர்த்தானே அவர்கள் முகத்தில் மலர்ச்சியைக் காண முடியும். பரிசில் கைக்கு வரும் வரை அவர்கள் முகத்தில் அமைந்த கவலைக் கோடுகள் – துன்பக் குறிகள் நீங்காவே! அவர்கள் கவலைக் கோடுகள் – துன்பக் குறிகள் நீங்கும் வரைக்கும் துன்ப முகம் தானே தோற்றமுறும்! ஈத்துவக்கும் ஒருமை இன்பத்தை அடைய முடியாதே! சுட்டுகிறார் வள்ளுவர்.

**“இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகம் காணும் அளவு”** (224)

இரந்தவர் இனிய முகம் காணும் அளவும் ஈயும் இரக்கமுடையவர்க்குக் கொடிய துயரம் கப்பிக்கிடக்குமாம்! எத்தகைய உயரிய உளவியல் பார்வை! வள்ளுவர் வள்ளுவரே தாம்!

# 23. நல்லோன் வறுமை

நயக்கத் தக்க பண்பாளன். பொருளாசை – பொருட்குவிப்பு என்பவை இல்லான். இல்லை என்னும் எண்ணம் இல்லாதவன்; வறுமையை வறுமைப்படுத்தி வெல்ல வல்லான்!

நல்லவன் வறுமைப்பட அந்நல்லவனை உணர்ந்தோரும் விடமாட்டார். அவர்கள் அவன் வறுமைப்படுகிறான் என்பதை அறியமுடியாவாறு உளவளத்தால் வாழப் பழகிவிட்டவன். அவனோ வலியப் பிறர் உதவ வந்தாலும் அதனையும் கொள்ளுதல் இல்லாதவன்.

வறுமை என்பது வறுமைப் படுவதாக எண்ணுவோரைத் தானே வாட்டும்! உள்ள அளவில் உவந்து வாழ்பவனை, எளிமையே இன்பம் என்று வாழ்பவனை வறுமை நெருங்காதே!

வறுமை என்பதை இலக்கணர் 'போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம் என்றுதானே கூறினர். உயிர்வாழவே உணவு, மானம் போற்றவே உடை, தலை மறைக்கவே உறைவிடம் என்றிருப்பானை வறுமை வாட்டல் உண்டா?'

வள்ளுவரோ, "நல்லோனாம் நயனுடையானுக்கும் வறுமை உண்டு" என்கிறார்.

வறியவன் என எண்ணமே இல்லானுக்கும் வறுமை உண்டு.

ஒரே ஓர் ஈரட்டி (ரொட்டி)! முதல் நாள் பாதி உண்டான்! மறுநாள் பாதி உண்ணும் போதே, நாளைக்கும் உதவுமென ஒரு பாதியை உண்டு மறுபாதியை வைத்தான்! அவனுக்கு அது வறுமையாகப் படவில்லை!

திருடன் ஒருவன் இரவில் புகுந்து திறவைப் பெட்டியைத் துழாவினான்! காசு எதுவும் அகப்படவில்லை. வீட்டான் விழித்துக் கொண்டு தான் படுத்திருந்தான்!

பகல் வெளிச்சத்தில் தேடியும் ஒரு காசும் இல்லை. நீ இரவு இருளில் தேடி என்ன எடுத்துவிடுவாய் என்று அமைந்து கூறினான்!

ஒருவன் அவனிடம் கற்றைப் பணத்துடன் வருகிறான். உன் மேல் எவ்வளவு பற்று அரசியர்க்கு! அதனால் இந்தக் காசுகளைத் தரச்

சொன்னார் என்றான்! ஏனெனில், அவன் அரசியார் செய்யும் குறைகளை அப்பட்டமாக எழுதி வந்தான் தன் இதழில்! பணத்தால் நிறைவு செய்து எழுதுதலை ஒடுக்கலாம் என நினைத்தவன் அவன்!

ஆனால் அதனைப் பெறாமலே சொன்னான், "உண்டும் உண்ணாமல் கிடந்தும் இப்படி எழுதும் நான், நீ தரும் காசு கொண்டு ஊக்க முற்றால். மேலும் அழுத்தமாகக் குறைகளை எழுதுவேன். அவர்க்கே அவர் கேடு செய்ததாக முடியும்; கொண்டு போ" என்றான்! அவன் வறியனா? வறுமை எண்ணத்தனா? அவன் அன்னவர்க்கும் வறுமை உண்டு என்கிறார் வள்ளுவர் என்ன வறுமை அது?

ஒருவன் நோயன்! மருந்தும் வாங்க வாய்ப்பு இல்லாதவன்! ஒருவன் மாற்றுடையும் இல்லாதவன்! அதனை மாற்றும் வகையில் புத்துடை வாங்கவும் வகையற்றவன்! ஒருவன் கல்வி ஆர்வலன்! மேலே கற்க விடா வறுமையால் படிப்பை இடைவிட்டுக் கூலி வேலைக்குச் செல்கிறான்!

ஒரு குடும்பம் தம்மிடமும் இல்லாமல் தருவாரும் இல்லாமல் மூன்று நாள் பட்டுணி!

இத்தகைய துயர்களைக் காண்கிறான். இவற்றைத் தீர்க்கும் வாய்ப்பு தன்னிடம் இல்லையே என ஏங்குகிறான்! ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு இழிவு என எண்ணுபவன் அவன்! அதனால் அவர்கள் படும் வறுமையைத் தான்படும் வறுமையாய் எண்ணி நோகிறான்! அவனை வாட்டத் தோல்விகண்ட வறுமை, அவன் பிறர் வறுமை தீர்க்க முடியவில்லையே என்று ஏங்க வைக்கும் வறுமையால் வாட்ட முறுகிறான். இதனைக் காணும் வள்ளுவர்,

**"நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர**
**செய்யா தமைகலா வாறு"** - (219)

என்கிறார். செய்ய வேண்டும் உதவியைச் செய்ய முடியவில்லையே என்னும் ஏக்கமே நல்லோனுக்கு உண்டாகும் வறுமையாம்! எப்படி உணர்ந்தால் அப்படி உரைக்க வள்ளுவரால் இயலும்?

❖❖❖

# 24. அச்சம் அறிவுடைமை

அஞ்சுவதா அறிவுடைமை? அச்சம் கோழைத்தனம் அல்லவா! "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்ற வள்ளுவரா, அச்சம் அறிவுடைமை என்கிறார்!

**"அச்சம்உள் ளடக்கி அறிவகத் தில்லாக்**
**கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி**
**எச்சமற்று ஏமாந் திருக்கை நன்றே"**

என்று **வெற்றி வேற்கை** (40) பழிக்கும் அச்சமா அறிவுடைமை! அச்ச முடையார் அறிவிலார் என்றல்லவோ கூறுகிறது அது.

'பே பே' என்று கூறி அச்சப்படுத்துகின்றனரே! எங்கோ இருந்து உருமல் கேட்டாலும் கால்நடுக்கம் வந்துவிடுகிறதே! இடிமின்னலுக்கு அஞ்சார் எவர்?

"பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்" என்பது பழமொழி ஆயிற்றே.

பகைக்கு அஞ்சாமை, அவைக்கு அஞ்சாமை எனக் கூறிய வள்ளுவர் அச்சம் கொள்ளல் வேண்டும்; அஃது அறிவுடையவர் அடையாளம் என்றால் என்ன காரணம்?

உள்ளம், உரம், ஊக்கம், வீறு, கூற்றையும் ஆடல் என்றெல்லாம் ஊக்கப்படுத்தும் வள்ளுவர் அச்சம் கொள்ளல் அறிவுடைமைச் சான்று என்றால் முரணாகத் தோன்றுகிறதல்லவா! ஆனால் முரணில்லை, அஞ்ச வேண்டும் இடங்கள், செயல்கள் உண்டு என்பது வாழ்வியல் மெய்மையாம்.

அஞ்சாமல் துணிவு கொள்ளும் இடமும் உண்டு.
அஞ்சி அடங்கி ஒதுங்கும் இடமும் உண்டு.

அதனால்தான்,

**"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்"** - (428)

என்றார் திருவள்ளுவர்.

**"அச்சமில்லை அச்ச மில்லை**
**அச்சம் என்ப தில்லையே!**

**உச்சிமீது வானிடிந்து**
**வீழு கின்ற போதிலும் -**
**அச்சமில்லை அச்ச மில்லை**
**அச்சம் என்ப தில்லையே!"**

என்று பாரதியார் பாடிய வீறு வேறு! அஞ்ச வேண்டிய இடமும் வேறு.

**"அச்சம் என்பது மடமையடா - அஞ்சாமை**
**திராவிடர் உடமையடா"**

எனப் பாரதி தாசனார் பாடினாலும், அஞ்சவேண்டும் இடத்து அஞ்சத்தானே வேண்டும்!

பாவம், பழி என்பவற்றைச் செய்யத் துணியலாமா? அவற்றுக்கு அஞ்ச வேண்டுமா இல்லையா? அதனால் அஞ்ச வேண்டியது, அஞ்ச வேண்டாதது என வள்ளுவர் இரண்டாகப் பகுக்கிறார்.

அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச வேண்டும்! அஞ்ச வேண்டாததற்கு அஞ்சுதல் ஆகாது என்கிறார்.

**"பந்தம் எரியுதோடி - கண்கள்**
**பார்க்கப் பயமாகுதடி**
**குந்தம் வாள்ஈட்டி எல்லாம் - கூடவே**
**கொண்டு திரியுதோடி"**

என்று புலியைப் பாடுகிறாரே கவிமணி.

"புலி அடித்தது பாதி கிலி அடித்தது பாதி"

என்பது பழமொழி அல்லவா!

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை பெண்மைக் குணம் என்பர். இந்நான்கும் ஆண்மைக்கும் வேண்டும் என்பதே வள்ளுவம்!

சால்பின் சான்றுகளுள் ஒன்று அல்லவோ நாணம்!

நாணாமை பேதையின் இயல்பு என்பதல்லவோ வள்ளுவம்.

நாணமிலார் வாழ்வு நடையிட்டுத் திரிந்தாலும் ஊஞ்சலில் ஆடும் பொம்மலாட்டமே யாம் என்பதும் வள்ளுவம் தானே!

அஞ்ச வேண்டியது ஆறறிவுப் பிறப்புடைய ஆண் பெண் ஆகிய இருபாலர்க்கும் வேண்டும் பண்பாகும்!

**"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை; அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்"** - (428)

❖❖❖



ஆ. சாரதையார் - முனைவர் அ. ஆறுமுகனார்

வெளியீடு
**திருவள்ளுவர் தவச்சாலை**
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101.
தொலைப் பேசி : 0431 - 2685328